# நம்வழி வேளாண்மை

பருவம் 33 ஏப்ரல் – ஜூன் 2025 இதழ் 1



**25.04.2025 அன்று பெங்களூர் இன்டர்நேஷனல் மையத்தில் ஐ.எஸ்.டி.எம். (ISDM) என்ற இந்திய மேம்பாட்டு மேலாண்மைப்பள்ளி நடத்திய சமூக மேம்பாட்டுக்கான டிஜிட்டல் தொழில்நுட்பச் செயலிகளின் விளக்க விழாவில் பங்கேற்றவர்கள்**

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஏப்ரல் – ஜுன் 2025 இதழ் 1

ஆசிரியர்

**பெ. விவேகானந்தன்**


### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

### நம்வழி வேளாண்மை குழுமம் பிற மொழி இதழ்கள்

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |


**நம் வழி வேளாண்மை**

45, டி.பி.எம். நகர்,

விராட்டிபத்து, மதுரை – 625 016.

தொலைபேசி : 0452– 2380082,9344523892.

இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,

**Honey Bee,**

SRISTI, AES Boys Hostel Campus,

Near Gujarat University Library & SBI Bank,

Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,

email: honeybee@sristi.org


## அறிவும் தொழில் நுட்பமும்

ஒரு சமுதாயத்தில் பின்பற்றப்படும் பாரம்பரிய அறிவு பல்லாண்டுகளாக மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உதாரணமாக ஆடி அமாவாசையில் பயிர் குழி எடுத்து விதை போடுதல், அமாவாசையில் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுத்தல், காலையில் இஞ்சி, பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் அருந்துதல், இரவில் தயிர் தவிர்த்தல் போன்றனவாகும். இதில் பாரம்பரிய பயிர் ரகங்கள், பயிர் ரகங்களின் சிறப்பு தன்மைகள், கால்நடை இனங்கள், இனங்களின் சிறப்பு அம்சங்கள் போன்றனவும் பாரம்பரிய அறிவிலிருந்து உருவானவையே. ஆரம்பத்தில் பாரம்பரிய அறிவு பயன்படுத்தப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு அது சில மனிதர்களால் நெறிப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இதனை யார் செய்தார்கள் என்பது தெரிந்து கொள்ள முடியாது. அதே சமயம் ஒரு புதிய தொழில் நுட்பம் சமீபத்தில் உதாரணமாக 50 ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்டிருந்தால் இதனை யார் உருவாக்கினார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

‘‘நம் வழி வேளாண்மை’’ இதழ் பணி மூலம் தமிழ்நாட்டில் மற்றும் பிற மாநிலங்களில் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் இதை உருவாக்கியவர்களை அடையாளம் பார்த்து ஊக்குவிக்கும் முயற்சியை கடந்த 30 ஆண்டுகளாக செய்து கொண்டு வருகின்றோம். இதனால் பாரம்பரிய வைத்யர்கள், கிராமப்புற கண்டுபிடிப்பாளர்கள் பலர் பயன் பெற்று உற்சாகமும் பெற்று தங்கள் அறிவை பாதுகாத்து பகிரவும், கண்டுபிடிப்புகளை மேன்மைபடுத்தவும், தேவையான நிதி உதவி பெறவும் துணையாக இருந்து வருகின்றோம். இதனால் பல பாரம்பரிய அறிவும் கண்டுபிடிப்புகளும் முக்கியத்துவம் பெற்று அழிந்து விடாமல் உள்ளன. இந்த முயற்சியில் தேசிய அளவில் தேனீகுழுமம் பேராசிரியர் அனில்குப்தா உறுதுணையாக இருந்து நாடு முழுவதும் மூலை முடுக்குகளில் பாதயாத்திரை நடத்தியும், தேசிய அளவில் பாரம்பரிய அறிவு, தொழில்நுட்ப கூட்டங்கள், கண்காட்சிகள் இன்றளவில் ஏற்பாடு செய்து கொண்டும் வருகிறார். இதற்கு உறுதுணையாக நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இந்த இயக்கத்திற்கு வலு சேர்ப்போம். நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கு வழி வகுப்போம்.

– பெ. விவேகானந்தன்

# குமரி வைத்திய மாநாடு



குமரி வைத்திய மாநாட்டை திருவட்டாறு மரியா சித்தா ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரி 17.05.2025 அன்று ஏற்பாடு செய்திருந்தது. இதில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சித்த வைத்தியர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் சித்த வைத்தியர்கள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

குமரி மாவட்டத்திற்கே உரித்தான காயதிருமேனி தைலம் பற்றி விளக்கம் கூறப்பட்டது. இதனை அடிபட்ட வீக்கம், காயம், புண், உடல் வலி இவற்றிற்கு மேல் பூச்சாக பூசி வர நல்ல நிவாரணம் கிடைப்பதாக கூறினர். இந்த தைலத்திற்கு ஜி.ஐ. (GI) அங்கீகாரம் மற்றும் பதிவுரிமை பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டினர். இம்மாநாட்டில் பலவகையான மூலிகைச் செடிகளை பார்வையிட்டு அவைகளின் பயன்களைப் பற்றி வைத்தியர் திரு. நாகலிங்கராஜா விளக்கிக் கூறினார்.

இதில் கூறப்பட்ட வைத்திய முறைகள் பின்வருமாறு: மனிதனுக்கு மூலம் மலச்சிக்கலினால் ஏற்படுகிறது. மூலத்தை குணப்படுத்த கீழ்க்கண்ட தைலத்தை தயார் செய்து வெளிப்பூச்சாக பூச வேண்டும்.

துத்தி இலைச்சாறு (1கிலோ), இதனுடன் ஒரு லிட்டர் விளக்கெண்ணெய் சேர்த்து அடுப்பில் நன்கு காய்ச்ச வேண்டும். தேன் பதம் வந்தவுடன் இதை ஆற வைத்து பாட்டிலில் ஊற்றி வைத்து பயன்படுத்தி வரலாம். (அல்லது) துத்தி இலை சூரணம் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வர வேண்டும். – (பிரான்சிஸ் பனிக்கவிலா).

2) எல்லா நோய்க்கும் முதல் மருந்து சுக்கை தூள் செய்து கறந்த பசும் பாலில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர எல்லா நோய்க்கும் நிவாரணம் கிடைக்கும்.

தலையில் பொடுகு பிரச்சனைக்கு வெப்பாலை இலையை தேங்காய் எண்ணெயில் வைத்து வெயிலில் வைத்து விட வேண்டும். இந்த வெப்பாலை தைலம் என்பது சோரியாசிஸ், பொடுகு மற்றும் தோல் நோய்களுக்கு பயன்படுத்தலாம்.

**காயதிருமேனி தைலம் தயாரிக்கத் தேவையான பொருட்கள்**

குப்பைமேனி, தைவேளை, கருடக்கொடி, சங்கங்குப்பி, கற்பூரவள்ளி, வேலிபருத்தி, முடக்காத்தான், நத்தை சூரி வகைக்கு 50 கிராம், கடைமருந்து துத்தம், சித்தரத்தை, கருஞ்சீரகம், ஜாதிபத்திரி, சந்தனம் வகைக்கு 1 கிராம். மேலே கூறப்பட்ட மருந்துகளை பொடித்து சூரணம் செய்து அதனை மேற்கூறிய மூலிகைகளை சாறு எடுத்து அதனுடன் 1/4 லிட்டர் நல்லெண்ணெய், 1/4 லிட்டர் தேங்காய் எண்ணெய், 1 கிராம் பச்சை கற்பூரம் சேர்த்து மெழுகுபதம் வரும் வரை காய்ச்சி வைத்துக்கொள்ள வேண்டும். இதனை அடிபட்ட வீக்கம், காயம், புண், உடல் வலி இவற்றிற்கு மேல் பூச்சாக பூசி வர வேண்டும்.

தலையில் உண்டாகும் பேன் குறைய குமட்டிக்காய் அரைத்து தலையில் பூசி வர வேண்டும்.

**கூந்தல் நன்கு வளர**

கூந்தல் நன்கு வளர தேங்காய் எண்ணெய் 1 லிட்டரில் பீர்க்கங்காய்ச்சாறு 1 லிட்டர் சேர்த்து காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்து பயன்படுத்தி வர வேண்டும்.

**சர்க்கரை நோய்க்கு**

சீந்தில் தண்டு, நாவல் கொட்டை, சிறு குறிஞ்சான், பெருங்குறிஞ்சான், வெந்தயம், கிராம்பு, கருஞ்சீரகம் அரைத்து தூளாக்கி வைத்து கொள்ள வேண்டும்.

இதை சாப்பாட்டுக்கு பின் நித்தமும் 10 கிராம் அளவு சாப்பிட வேண்டும் (பெரியவர்கள்) சிறுவர்களுக்கு 5 கிராம் கொடுக்கவும். சூரியன் மறைந்த பிறகு அரிசி உணவைத் தவிர்க்கவும். இந்த வைத்தியத்தை 9 நாள் தொடர்ந்து கடைபிடித்து வர வேண்டும். அல்லது கறிவேப்பிலை 10, மிளகு 6, சீரகம் 5 கிராம், வெல்லம் 5 கிராம், இதை அரைத்து கலவையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர இரத்தம் ஊறும், சர்க்கரை சத்து குறையும்.

**வாத நோய்க்கு**

நல்லெண்ணெய் 100 மி.லி., விளக்கெண்ணெய் 100 மி.லி., வெள்ளைப்பூண்டு 20 கிராம், மிளகு 5 கிராம், சீரகம் 5 கிராம், இதை கொதிக்க வைத்து வடிகட்டி

இரவு படுக்கும் முன் 5 மி.லி. எண்ணெய் குடிக்கலாம். எண்ணெய் குடித்த பிறகு சுடு நீர் அருந்த வேண்டும். எண்ணெய்யை வெளி பூச்சாக வலி உள்ள இடத்தில் பூச வேண்டும்.

– ஸ்ரீதரன், சேலம். செல் : 9443938859

**பசுக்கள் சினைபிடிப்பதற்கு**

கொள்ளு 250 கிராம் முளை கட்ட வைத்து இரண்டு அல்லது மூன்று பருவகால சுழற்சி வரை கொடுத்து வர வேண்டும் (42 நாட்கள்). சினைக்கு வரும் அறிகுறி தெரிந்தவுடன் ஆறு மணி நேரம் கழித்து 18 மணி நேரத்திற்குள் சினை ஊசி போடவேண்டும். சினை ஊசி போடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் நல்லெண்ணெய் 50 மி.லி. சீயக்காய்த்தூள் 50 மி.லி. தேங்காய் துருவல் 50 கிராம், நாட்டுச்சர்க்கரை 50 கிராம், மஞ்சள் 50 கிராம். சேர்த்து உள்ளே கொடுக்க வேண்டும்.

– சிவமுரளி , முள்ளங்கினாவிளை

**என்றென்றும் இளமைக்கு**

காலையில் இஞ்சி, கடும் பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் சேர்த்து வர வேண்டும்.

இவை மூன்றும்தான் வாத, பித்த, கபம் சமன் செய்பவை. சுக்குக்கு புறநஞ்சு, கடுக்காய்க்கு அக நஞ்சு எனும் விளக்கம் உள்ளது. அதாவது சுக்கில் மேலே உள்ள தோல் பகுதி நஞ்சு எனவும், கடுக்காயில் உள்ளே உள்ள கொட்டை நஞ்சு எனவே இவைகளை நீக்கினால்தான் அமிர்தமாக வேலை செய்யும்.

மாட்டு உடம்பில் கசடுகள் (கர்ப்பபை) நீங்கி சுத்தமாக கலப்பை கிழங்கு (காந்தாள் பூ) உடலில் எடையில் 5 சதவீதம் கொடுக்க வேண்டும்.

**மாடுகள் அஜீரணத்திற்கு**

கொல்லங்கோவை கிழங்கு தூள் தர வேண்டும்.

**புழு வைத்த புண்ணுக்கு**

வேப்ப எண்ணெயில் ஆடுதின்னாப்பாலை, கருஞ்சித்தகத்தி இரண்டையும் காய்ச்சி மேல் பூச்சாக பூசி வர வேண்டும்.

**குடல் புழுக்களுக்கு** : வேப்ப எண்ணெயில் நொச்சி இலை, வேலிப்பருத்தி இலை, நத்தைசூடு, தைவேளை, குப்பைமேனி சேர்த்து அரைத்து காய்ச்சி பயன்படுத்தலாம். மாடுகளுக்கு 50 மி.லி. கன்றுக்குட்டிகளுக்கு 20 மி.லி கொடுக்கலாம்.

## செல்லமுத்துவின் இயற்கை மஞ்சள் சாகுபடி



பட்டம் : வைகாசி – ஆடி வரை

உழவு : 4 முறை உழவு செய்ய வேண்டும். உழவுசெய்த பின் பல தானியப்பயிர் ஏக்கருக்கு 25 கிலோ விதைக்க வேண்டும். சணப்பை, தக்கைப்பூடு, எண்ணெய் வித்து பயிர், தானிய விதை, வாசனைத்திரவியம் போன்றவைகளை ஒவ்வொன்றும் சுமார் ஒரு கிலோ அளவு (விலை அதிகமாக இருந்தால் அரைக்கிலோ போதுமானது) எடுத்துக்கொண்டு மொத்தம் 25 கிலோ வரை சேர்த்து விதைக்க வேண்டும். பயிர்முளைத்த 45வது நாளில் மடக்கி உழுது உரமாக்கலாம்.

அடிஉரம் : 10 டிராக்டர் குப்பை குப்பை (சுமார் 10–15 டன்) இட வேண்டும். பின் பாத்தி கட்டி மஞ்சள் விதை கிழங்கு நடவு செய்ய வேண்டும். அடியுரமாக வேப்பம்புண்ணாக்கு 100 கிலோ தூள் இடலாம்.

**விதைப்பு** : 1500 கிலோ விதை மஞ்சள் தேவைப்படும்.

இடைவெளி: முக்கால் அடி வரிசைக்கு வரிசையும் வரிசையில் அரையடி இடைவெளியும் இருக்க வேண்டும்.

**ஊடுபயிர் சாகுபிடி :** ஊடுபயிராக செம்மாந்தழை (சித்தகத்தி) விதை ஓர் ஏக்கருக்கு 3/4 கிலோ தேவைப்படும். சின்ன வெங்காயம் அல்லது மக்காச்சோளம் பயிர் செய்யலாம். ஓர் அடி இடைவெளியில் நடவேண்டும். வெங்காயம் ஊடு பயிராக பயிர் செய்யும் சமயம் 400 கிலோ விதைக்காய் தேவைப்படும். மக்காச்சோளம் சாகுபடி செய்தால் ஓர் ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது.

**நீர்பாய்ச்சுதல்:** 4 நாட்களுக்கு ஒரு தடவை நீர்பாய்ச்சுதல் வேண்டும்.

**களையெடுத்தல் :** நடவு செய்த 15வது நாள் முதல் களை எடுப்பு செய்யலாம். பின்னர் 15நாள் இடைவெளியில் களையெடுப்பு செய்ய வேண்டும். 4 முறை செய்யலாம்.

**மேலுரம் இடுதல்:** ஜீவாமிருதம் நட்ட 15 வது நாளில் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து விடலாம். பின்னர் 35வது நாளில் மீன் அமினோ அமிலம் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 50வது நாளில் 7வகை புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர் நீரில் கலந்து வயலில் பாய்ச்ச வேண்டும். 70 வது நாளில் அமிர்தக்கரைசல் ஏக்கருக்கு 30 லிட்டர் நீரில் கலந்து பாய்ச்ச வேண்டும். மேற்கண்ட முறையில் மீண்டும் இதே முறையில் கீழ்க்கண்ட நாட்களில் கடைபிடிக்கலாம். அதாவது 90வது நாளில் ஜீவாமிருதம் 30 லிட்டர், 110 வது நாளில் மீன் அமினோஅமிலம் 2 லிட்டர், 130 வது புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர், 150 வது ஜீவாமிருதம் 30 லிட்டர் 170 வது மீன் அமினோ அமிலம் 3 லிட்டர் 190 வது புண்ணாக்கு கரைசல் 30 லிட்டர் பயன்படுத்தலாம்.

**பயிர் பாதுகாப்பு** : நடவு செய்த 15வது நாள் பூச்சிவிரட்டி ஏக்கருக்கு 7 லிட்டர் கரைசலை 120 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் 10 டேங்க் தெளிக்கலாம். 30 வது நாளில் பஞ்சகவ்யா 3 லிட்டர் கரைசலை 120 லிட்டர் நீரில் (10 டேங்கில்) கலந்து விசைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். 45 வது நாளில் மீன் அமீனோ அமிலம் 1.5 லிட்டரை 120 லிட்டர் நீரில் கலந்து (10 டேங்க்) தெளிக்க வேண்டும். 60 வது நாளில் இஞ்சி பூண்டு மிளகாய்க்கரைசல் 7 லிட்டரை 120 லிட்டர் நீரில் (10 டேங்க்) விசைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். 75 வது நாளில் பஞ்சகவ்யாவுடன் பூச்சி விரட்டி கலந்து (2 லிட்டர் பஞ்சகவ்யா + 5 லிட்டர் பூச்சி விரட்டி) 120 லிட்டர் நீரில் அதாவது 10 டேங்கில் கலந்து தெளிக்க வேண்டும். 90வது நாளில் பூச்சி விரட்டி, 105வது நாளில் பஞ்சகவ்யா, 120வது நாளில் மீன் அமினோஅமிலம், 135வது நாளில் இஞ்சி பூண்டு மிளகாய் கரைசல், 150வது நாளில் பூச்சி விரட்டி + பஞ்சகவ்யா, 165 வது நாளில் பூச்சிவிரட்டி, 180 வது நாளில் பஞ்சகவ்யாபயன்படுத்தலாம்.

**வேரழுகல், நூற்புழுக்களை கட்டுப்படுத்த**

90வது நாளில் மற்றும் 150வது நாளில் பெருங்காயம் 1 கிலோவை சாக்கில் வைத்து வாய்க்கால் வாமடையில் வைத்து விட வேண்டும். இதனால் நீரில் கலந்து பயிருக்குச் சென்று அழுகல் நோய், நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும்.

**அறுவடை** : 7–8 மாதங்களில் மாசி–சித்திரை மாதங்களில் அறுவடை செய்ய வேண்டும்.

**விளைச்சல்** : முதல் வருடம் 30 குவிண்டால் / ஏக்கருக்கு (முதல் அறுவடை முடிந்த பின் பல தானியப்பயிர், பசுந்தாள் உரப் பயிர்களான கொள்ளு, தக்கைப்பூண்டு 25 கிலோ விதைத்து நீர் பாய்ச்ச வேண்டும். 40வது நாளில் மடக்கி உழுது விட வேண்டும்). 2 வது வருடம் 35 குவிண்டால் விளைச்சல், பின்னர் வரும் வருடங்களில் 40 குவிண்டால் குறையாமலிருக்கும்.

மஞ்சள் கிழங்கில் கூமின்அடர்த்தி 3.7 – 4.20 அளவில் உண்டாகும். செயற்கை உரமிட்ட நிலங்களில் கூமின் அளவு 3க்கும் குறைவாகவே இருக்கும். செல்லமுத்து, கருக்கம்பாளையம், கொடுமுடி வழி, ஈரோடு மாவட்டம்.
b r š : 9486602389

## தன்ராஜின் மரவள்ளிக்கிழங்கு சிப்ஸ் வெட்டும் கருவி கொண்டு மதிப்பு கூட்டும் உணவு தயாரிப்பு




நாமக்கல் மாவட்டம், பேளுக்குறிச்சி கிராமத்தில் திரு. தன்ராஜ் 2015ல் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் தான் உருவாக்கிய மரவள்ளிக்கிழங்கை வெட்டும் கருவிக்காக விருது பெற்றவர். இவர் மரவள்ளிக் கிழங்கிற்கு குறைந்த விலை கிடைப்பதாலும், சவ்வரிசி, சேமியா தயாரிக்கும் தொழிற்சாலைகளினால் ஏற்படும் சுகாதாரமற்ற உணவு தயாரிப்பிலும் ஏற்படும் நிலைமையை அறிந்து மரவள்ளிக்கிழங்கு மாவு கொண்டு முருக்கு, பாயசம், மெதுவடை தயார் செய்து வெற்றி கண்டுள்ளார். ஆடுகளுக்கு மரவள்ளிக்கிழங்கு மாவை 200 கிராம் தீவனமாகத் தரலாம். மாடுகளுக்கு 500 கிராம்

தீவனமாகத் தரலாம். மரவள்ளிக்கிழங்கு மாவு உணவில் சேர்ப்பதால் தாய்ப்பால் கூடும்.

**முறுக்கு சுடுதல் :** அரைக்கிலோ கடலை மாவுடன் அரைக்கிலோ மரவள்ளி மாவு சேர்த்து ஓமத்தூள் கலந்து சுடுவதால் நல்ல மொறுமொறுப்புடன் சுவையும் நன்றாக இருக்கும். விலையும் குறையும் தற்சமயம் மரவள்ளிக்கிழங்கு 1 கிலோவிற்கு ரூ. 5–10 வரை விற்கப்படுகிறது.

**பாயாசம் :** ஜவ்வரிசி உற்பத்தி செய்ய அமிலத்தைப் பயன்படுத்தி செயற்கை வெள்ளை நிறம் உருவாக்கப்படுகிறது. இதனால் ஆரோக்ய சீர்கேடு ஏற்பட வாய்ப்புண்டு. இதற்காகவே கிழங்கை சிப்ஸ் போன்று வெட்டி நறுக்கி பின் மாவாக்கி ஏலக்காய், முந்திரி போட்டு கிண்டி பாயாசமாக அருந்த நல்ல சுவை கிடைக்கும். இதில் மெதுவடை, சிப்ஸ் போன்றனவும் தயார் செய்து பயன்படுத்தலாம்.

மூன்று கிலோ கிழங்குகளிலிருந்து 1 கிலோ மாவு கிடைக்கும். ஒரு கிலோ மாவு ரூ. 50க்கு கிடைக்கும். மரவள்ளிகிழங்கு மாவிலிருந்து முறுக்கு சுட்டால் ரூ. 300 (ஒரு கிலோவிற்கு) கிடைக்கும்.

ஜெ. தன்ராஜ், கல்குறிச்சி, சேந்தமங்களம் தாலுகா
நாமக்கல் மாவட்டம். செல் : 9443469132

## இயற்கை நிலக்கடலை சாகுபடி

முதலில் நிலத்தை இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். அடியுரமாக கனஜீவாமிருதம் தயார் செய்து ஏக்கருக்கு 100 கிலோ தூவ வேண்டும்.

**கனஜீவாமிருதம் தயாரிக்கும் முறை**

உலர்ந்த மாட்டு சாணத்தை எடுத்து ஜீவாமிர்தம் கரைசலில் போட்டு உலர வைத்து சணல் பையில் போட்டு கட்டவும். இதனை எடுத்து பயிர்களுக்கு அடிப்பாகத்தில் தூவ வேண்டும். (கனஜீவாமிர்தம் தயாரிக்க பசுஞ்சாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். உப்புமா பதம் வருவதற்கு எவ்வளவு தேவையோ அந்த அளவிற்கு நாட்டு மாட்டுக் கோமியத்தை சேர்க்க வேண்டும். பின்பு உருட்டி நிழலில் காய வைத்து தேவைப்படும் போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்).

பின்னர் பாத்தி கட்டி நிலக்கடலை விதைகளை நடவு செய்ய வேண்டும். ஓர் ஏக்கருக்கு 44–48 கிலோ விதை தேவைப்படும். விதைகளை முக்கால் அடி இடைவெளியில் நடலாம். நடுவதற்கு முன் பீஜாமிருதக் கரைசல் தயார் செய்து சுமார் 10 நிமிடங்கள் விதைகளை இதில் ஊற வைக்க வேண்டும். இச்சமயம் நிலக்கடலை விதையின் மேல் தோல் பிரிந்து விடாமல் இருக்க வேண்டும். நடவு செய்த பின்னர் 20 நாளைக்கு ஒரு முறை ஜீவாமிருதக் கரைசல் தெளிக்க வேண்டும்.

**ஜீவாமிர்தக் கரைசல் தயாரிக்கும் முறை**

மாட்டுச்சாணம் 15 கிலோ, கோமியம் 15 லிட்டர், வெல்லம் 2 கிலோ, பயறு வகை (ஏதாவது ஒரு பயறு) 2 கிலோ (ஊற வைத்து அரைத்து). பின்னர் ஒரு கைப்பிடி அளவு மண் நிலத்திலிருந்து எடுத்து போடவும். இதனை நன்கு கலந்து விட வேண்டும். இப்படியாக 2 நாட்கள் கலக்கவும். பின்னர் இந்தக் கரைசலை 10 லிட்டர் நீருக்கு 300 மி.லி. என்ற அளவில் கலந்து நிலத்திற்கு மண்ணில் ஊற்றலாம். அல்லது பாசனநீரில் கலந்து விடலாம். இது ஓர் ஏக்கருக்கு போதுமானது. இந்தக்கரைசலை ஒரு மாதம் வரை பயன்படுத்தலாம்.

நடவு செய்த 30 வது நாளில் மீன் அமிலக்கரைசல் 2 லிட்டர் எடுத்து நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**மீன் அமிலக்கரைசல் தயாரிக்கும் முறை**

ஒரு கிலோ மீன் கழிவுடன் ஒரு கிலோ வெல்லம் (கழிவு வெல்லம் குறைந்த விலையில் கிடைக்கும்). வாழைப்பழம் 3 சேர்த்து ஒரு பாத்திரத்தில் அப்படியே 30 நாட்கள் வைத்து விடவும். இதிலிருந்து சுமார் 600 –700 மி.லி. கரைசல் கிடைக்கும். இதனை தெளிப்பானில் 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி கரைசல் என்ற விகிதத்தில் சேர்த்து தெளிக்கலாம். நட்ட 20 நாளிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பயிர் இரசாயன உரம் இல்லாமலேயே செழித்து வளரும். ஓர் ஏக்கருக்கு போதுமானது. இதனை தெளிப்பானில் 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி. கரைசல் என்ற விதத்தில் சேர்த்து தெளிக்கலாம். நட்ட 20 நாளிலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பயிர் இரசாயன உர இல்லாமலோய செழித்து வளரும். இவ்வாறு செய்து வந்தால் எந்த இரசாயன உரமும் இல்லாமல் நல்ல மகசூல் கிடைக்கும்.

தமிழ்மணி, வைத்தியலிங்காபுரம்,
ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம்
செல் : 9245134568

## கால்நடை மூலிகை வைத்தியத்திற்கான முன்மாதிரி செயலி

புது டில்லியை மையமாக கொண்ட ISDM என்ற கல்வி நிறுவனத்துடன் இணைந்து ஒரு முன்மாதிரி கால்நடை மூலிகை வைத்திய செயலி ஒன்றை உருவாக்கி உள்ளோம்.

நம் வழி வேளாண்மை இதழில் வெளியிடப்பட்டுள்ள பாரம்பரிய மூலிகை வைத்திய முறைகளை முறைப்படி பட்டியலிட்டு கணினியின் சங்கேத எண்கள் வரிசைப்படுத்தப்பட்டு இணைக்கப் பட்டுள்ளன.

25.04.2025 அன்று பெங்களூர் இன்டர்நேஷனல் சென்டர், பெங்களூரில் 6 செயலிகளின் விளக்க விழா நடைபெற்றன.

ISDM மூலமாக உதவித் தொகை வழங்கப்பட்ட 6 நபர்கள் தங்களுடைய சமுதாயத்திற்கு உதவும் செயலிகளை பற்றிய விளக்கம் கொடுத்தனர்.

சேவா நிறுவனத்திலிருந்து பெ. விவேகானந்தன், சே.விவேகானந்தன், கே.சங்கீதா, உதயகுமாரி, ராஜ்சேகர்மனோகர் அடங்கிய குழுவானது மூலிகை வைத்திய செயல் விளக்கத்தை விளக்கிக் காட்டினார்கள்.

பிற 5 குழுக்களும் குழந்தைகளின் சத்துணவு பற்றாக்குறையை கண்டறிந்து ஒழுங்குபடுத்தும் செயலி, திருநங்கைகளுக்கான வாழ்வாதார முன்னேற்ற திட்ட செயலி. மாற்று திறனாலிகளுக்கான செயலி. பருவ நில கால மாறுபாட்டினை காரணிகள் பற்றிய செயலி. வாழ்க்கை தரத்தை நிர்ணயிக்கும் காரணிகள் பற்றிய செயலி எடுத்துரைத்தனர்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு ISDM கல்வி நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீதர் ரவிக்குமார் சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார். கால்நடை மூலிகை வைத்ய செயலியை தமிழ், கன்னடம், ஆங்கில மொழிகளில் தெரிந்துகொள்ள கீழ்க்கண்ட இணையதள தொடுப்பில் கைப்பேசி மூலமாகவும், கணினியின் மூலமாகவும் தெரிந்துகொள்ளலாம் chatlivestockseva.org.

## சுரேஷ்குமாரின் எதிர்கால “மினியேச்சர்” கீரை விவசாயம்



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நாகலாபுரம் சாமிஅய்யாநாடார் மேல்நிலைப்பள்ளியில் வேளாண்மை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் திரு. சுரேஷ்குமார் வயது 62. நம்முடைய பொன்னான நேரத்தை பயனுள்ளதாக மாற்றுவதற்கு நம் வீட்டிலேயே குறைந்த செலவில் அதிக மருத்துவ குணம்கொண்ட “மைக்ரோகிரீன்” என்னும் நுண் இலைக் கீரையை மிக எளிமையான முறையில் வீட்டில் வளரப்பது எப்படி என்பது பற்றிய இலவச ஆலோசனை விளக்கத்தை கோ.சுரேஷ்குமார் கூறிவருகிறார். இயற்கையாகவே அதிக சத்துடன் மருத்துவ குணம் கொண்ட சிறிய தண்டு இலைக் கீரைத்தாவரங்கள் “மைக்ரோகிரீன்” அல்லது “ மினியேச்சர்” கீரைகள்

**வளர்ப்பு முறை**

மைக்ரோகிரின் (Microgreens) என்பது விதைகள் முளைத்து 7 முதல் 14 நாட்கள் வரை வளர்ந்த சிறிய இளம் இலைகளாகும். இவை ஊட்டச்சத்து மிக்கவை கோதுமை, சூரியகாந்தி, பட்டாணி தண்டு, முள்ளங்கி, வெந்தயம் மற்றும் தக்காளி, க்ரெஸ், முருங்கை, கொத்தமல்லி, மற்றும் பிற கீரை வகைகள் உட்பட பல்வேறு நலன் தரும் விதைகளை பயன்படுத்தலாம். இது ஒரு வெற்றிகரமான உட்புற சாகுபடி முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக கீரைகள் நமது அன்றாட உணவில் பெரும் பங்கு வகிக்கிறது. இது ஓர் இலைக் காய்கறி வகையை சேர்ந்தது. இவற்றின் இலைகள் மற்றும் தண்டுகளில் இரும்புச்சத்து, சுண்ணாம்புச்சத்து, வைட்டமின் சி

போன்ற சத்துகளை அதிக அளவில் கொண்டுள்ளன. மேலும் இந்த கீரைகளில் புரதம், அத்தியாவசிய அமினோ அமிலங்கள், நார்ச்சத்து போன்றவை உள்ளன. நமது அன்றாட உணவில் ஒரு நாளைக்கு எவ்வளவு கீரை சேர்க்க வேண்டும் என்பதில் வயது, உடல்நிலை, உடல் எடை மற்றும் வாழ்க்கை முறைக்கு ஏற்பமாறுபடும். பொதுவாக, ஆரோக்கியமான ஒரு மனிதன் தினமும் 100–150 கிராம் (அல்லது 1–1.5 கப் சமைத்த கீரை) எடுத்துக் கொள்வது சிறந்தது. என பச்சை இலைக் காய்கறி உணவியல் வல்லுநர்கள் பரிந்துரைக்கின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் கீரை வகைகளின் தேவையும் அதிகரித்துள்ளது. குறைந்த காலத்தில் வளர்ச்சி கொண்ட கீரைகளை படித்த வேலையில்லா இளைஞர்கள் மற்றும் குடும்பப் பெண்கள் ஒரு குறைந்த இடத்தில் வீட்டின் உட்புறங்களிலோ அல்லது வெளிப்புறங்களிலோ சிறிய பசுமை குடில் அமைத்து சிரமமின்றி எளிதாக வளர்க்கலாம். அதே நேரத்தில் நல்ல முழுமையான ஈடுபாடு இருந்தால் இதை சுயதொழிலாகவும் நாம் மாற்றலாம். நல்ல வருமானம் ஈட்டலாம். எனவே நம் அன்றாட வீட்டிற்கு தேவையான ‘‘மைக்ரோகிரீன்’’ கீரைகளை வளர்த்து நம் ஆரோக்கியத்தை நாமே மீட்டு எடுப்பதற்கு சில மணி நேரத்தை நல்ல பயனுள்ளதாக மாற்றி நமது குடும்ப உறுப்பினர்கள் உடல் நலத்தை மிக நல்ல வழிகளில் பாதுகாத்துக்கொள்ளலாம்.

‘‘மைக்ரோகிரீன்’’ என்பது ஒரு இளம் தண்டுகள் மற்றும் பச்சை இலைகள் கொண்ட3–10 செ.மீ உயரம் வளர்ந்த உண்ணக்கூடிய காய்கறி வகை கீரையாகும். இதனை முளைத்த 7– 12 நாட்களுக்குப் பிறகு அறுவடை செய்து உணவாகப் பயன்படுத்தலாம். வீட்டில் ‘‘மைக்ரோகிரீனை’’ வளர்ப்பதற்கு தரமான விதை, மண்புழுஉரம், பிளாஸ்டிக் தட்டுகள் தேவைப்படும்.

இதனை வளர்ப்பதற்கு விலை உயர்ந்த உபகரணங்களோ அல்லது அதிக தண்ணீரோ தேவைப்படாது. ஒரு நாளைக்கு 5 லிட்டர் தண்ணீரை வைத்து 50 வகையான இளம் தளிர் கீரைக்கட்டுகளை உற்பத்தி செய்யலாம். அதாவது முள்ளங்கி, வெந்தயம், கேரட், பூண்டு, வெங்காயம், கீரைவகைகள், பீட்ருட், கோதுமை, பயறு வகைகள் உட்பட பல்வேறு கீரை விதைகளை வீட்டில் பயன்பாட்டில் இருந்து தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் வாளி, பெரிய மக், பாட்டில்கள், குழித்தட்டு டிரே உபயோகப்படுத்தி வளர்க்கலாம். மண்புழு உரம், இயற்கை சாண உரம், தாய்மண், ஆற்றுமண் ஆகிய கலவையை 5 செ.மீ. உயரம் செய்து மேலே விதைகளை தூவி லேசான மேல் மண் இட்டு, கைகளால் தண்ணீர் தெளித்து 10 செ.மீ. உயரம் வரை வளர்த்து மெல்லிய தண்டுடன் கூடிய இரண்டு இலை கொண்ட கீரைகளை அறுவடை செய்யலாம்.

‘‘மைக்ரோகிரீன்கள்’’ நறுமணமுள்ள சத்தான ஊட்டச்சத்து நிறைந்த நோய் எதிர்ப்புசக்தி கொண்ட ஒரு ஆக்ஸிஜனேற்றி உணவாகும் என்பது குறிப்பிட தக்கது. அதாவது முதிர்ந்த கீரைகளை விட 40 மடங்கு அதிக வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் ஆக்ஸிஜனேற்றிகளை கொண்டுள்ளன. இதனை சூப்கள், ஆம்லெட்டுகள், கறிகள், இட்லி, தோசை, சப்பாத்தி சான்விச், சாலேட்டுகள் மற்றும் பிற சூடான உணவுகளில் கலந்து சாப்பிடுவதால் நீரிழிவு நோய், இதய நோய் ‘‘ட்ரைகிளிசரைடு’’ மற்றும் எல்.டி.எல் கொழுப்பின் அளவைக் குறைக்கலாம்.

அதிக வாடிக்கையாளர்கள் கூடும் உடற்பயிற்சிக் கூடங்கள் (ஜிம்கள்), மருத்துவமனைகள், ஹோட்டல்கள் மற்றும் புதிய, கரிம மைக்ரோகிரீன்களின் ஆரோக்கிய நன்மைகளை மதிக்கும் தனிப்பட்ட நுகர்வோர் இதை அதிகமாக விரும்புகின்றனர். இதற்குக் காரணம் நாம் பெரும்பாலும் வீட்டுக்குத் தேவையான முதிர்ச்சியடைந்த கீரைகளை விட ‘‘மைக்ரோகிரீன்’’அதிக சத்து நிறைந்து காணப்படுகிறது.

ஆகையால் இனிவரும் காலங்களில் நாம் அதிக அளவு காய்கறிகளை அதிக விலை கொடுத்து கடைகளில் வாங்காமல் ஊட்டச்சத்து நிறைந்த ‘‘மைக்ரோகிரீனை’’ நம் வீடுகளில் எளிதாக வளர்த்து, செலவை குறைத்து, நம் உடல் ஆரோக்கியத்தையும், எதிர் வரும் ஆபத்தான நோய் தாக்குதலிருந்து பாதுகாத்தும் நமது பொருளாதாரத்தையும் உயர்த்தி கொள்ளலாம்.

## மைக்ரோகிரீன் வளர்ப்பு செயல்முறை:



1. பொருட்கள் தேவை:
விதைகள்: விதைகளை 12 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, 36 மணி நேரம் முளை கட்டி வைக்க வேண்டும். சூரியகாந்தி. முள்ளங்கி. கடுகு, வெந்தயம், பீட்ரூட், பட்டாணி போன்றவை.

**மண் அல்லது வளர்ப்பு ஊடகம்:**

1.சிறந்த தாய் மண் 1 பங்கு மற்றும் கோகோபீட் 1 பங்கு அல்லது (தாய் மண் +மண்புழு உர கலவை)
2.தட்டு அல்லது பிற வளர்க்கும் கொள்கலன்
3.நீர் தெளிக்கும் ஸ்பிரேயர்
4.ஒளி மற்றும் காற்றோட்டம் உள்ள இடம்

**விதைப்பது**

வளர்ப்பு தட்டில் வளமான மண் (அல்லது கோகோபீட்) பரப்பி, அதை ஈரமாக வைத்துக்கொள்ளவும்.

விதை முளைகட்டிய விதைகளை சமமாக பரப்பி, அவற்றின் மீது மண் சிறிது தூவி விடவேண்டும். 24–48 மணி நேரம் பாலித்தீன் பை அடைபட்ட சூழலில், அறை வெப்ப நிலையில் வைத்தால் நன்றாக முளைக்கும்.

**நீர் மற்றும் பராமரிப்பு:**

தினமும் காலை, மாலை இரண்டு முறையும் மிதமான நீர் தெளிக்கவும்.

நேரடி வெயிலில் வைக்காமல், மறைமுக ஒளி கிடைக்கும் இடத்தில் வைக்கவும்.

**4. அறுவடை:**

7–14 நாட்களில், 2–4 இலைகள் வளர்ந்தவுடன், பச்சையாக வெட்டி உணவில் பயன்படுத்தலாம்.

மிகவும் பயன்பெறும் மைக்ரோகிரீன்கள்:
முளைகட்டிய வெந்தயம் சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவும். கொத்தமல்லித்தழை நெஞ்செரிச்சல் மற்றும் ஜீரணத்திற்கு நல்லது. முளைகட்டிய முள்ளங்கி ரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. பீட்ரூட் மைக்ரோகிரின் இரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்த உதவும்.

இவை வீட்டிலேயே எளிதாக வளர்த்து, தினசரி உணவில் சேர்த்தால் ஆரோக்கியமான உணவாக இருக்கும்.

மைக்ரோகிரீன்கள் சத்து ரீதியாக மிகவும் சக்திவாய்ந்தவை என்பதால், தினசரி உணவில் அவற்றை சேர்ப்பது ஆரோக்கியத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாமே நேரடி கண்காணிப்பில் தயார் செய்வதால் எந்த தேவையில்லாத செயற்கை உரம், பூச்சிக் கொல்லி மருந்து, வேறு விதமான கலவைகள் ஏதும் இல்லாமல் மைக்ரோகிரின் கீரைகளை பெறலாம். இன்று பெரும் நகரங்களில் 100 கிராம் கீரைகள் ரூ 150– ரூ 200 க்கு விற்பனை ஆகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது. இனி வருங்காலங்களின் இதன் மதிப்பு கூடும். காரணம் இதன் சுவை, நிறம், ஊட்டச்சத்து ஆகியன ஒரு சிறிய அளவுள்ள குட்டி தாவரத்தில் அணு அளவில் பொதிந்துள்ளது. இந்த கீரைகளை வீட்டின் ஜன்னல் ஓரம், பால்கனி அல்லது சமையல் அறையில் உள்ள இடங்களில் வளர்க்கலாம். ஓர் உண்மை மிக தெளிவாகின்றது இனிவரும் எதிர் கால உணவு புரட்சியில் நமது கைகளில் நேரடியாக விதைத்து அறுவடை செய்து உண்பதுதான் சூழல் பாதுகாப்பு சிறப்பு என்பதை அனைவரும் உணர்வீர்கள் என்பது திண்ணம். எனவே இந்த சிறிய சுவையான மற்றும் சத்தான கீரைத் தாவரங்கள் வளர்ப்பு பற்றிய மேலும் இலவச ஆலோசனை பெறுவதற்கு 9443620932 என்ற கைபேசியில் தொடர்பு கொண்டு மேலும் விபரம் அறியலாம்.

கோ.சுரேஷ்குமார், முன்னாள் வேளாண்மை தொழிற்கல்வி ஆசிரியர், 629/ம5, கணேஷ்நகர், மூக்கரை விநாயகர் கோவில் 5வது தெரு, கோவில்பட்டி (அஞ்சல்) 628 601. தூத்துக்குடி (மாவட்டம்) செல் : 9443620932

## கோவிந்தனின் மூலிகை வைத்யம்



சேலம் மாவட்டம், அயோத்திபட்டிணத்தில் பால்கறவைக்காரராக பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. கோவிந்தனுக்கு வயது சுமார் 70. இவர் பின்பற்றும் கால்நடை மூலிகை வைத்யம் பின்வருமாறு:

**காய்ச்சல் மற்றும் படுத்த மாடு எழுந்திருக்க வைத்யம்**

கற்பூர வெற்றிலை, வேலிப்பருத்தி, தும்பை, துளசி, முடக்கத்தான் இலை 2 கைப்பிடி, பூண்டு 100 கிராம், சுக்கு 50 கிராம், கட்டி பெருங்காயம் 500 கிராம், சின்ன வெங்காயம் 10 கிராம், சீரகம் 50 கிராம், மிளகு 50 கிராம், சமையல் சோடா 2 டீஸ்பூன், கல் உப்பு சிறிதளவு இவை அனைத்தையும் உரலில் இட்டு நன்கு இடித்து ஒரு வெள்ளைதுணியில் சிறு சிறு உருண்டைகளாக பிடித்து அந்த உருண்டையை வெதுவெதுப்பான சுடுதண்ணீரில் நனைத்து மாடு மற்றும் ஆட்டின் கண், காது, மூக்கில் 10 சொட்டு சாறு பிழிந்து விட்டு பிறகு அந்த உருண்டையை மாட்டிற்கு வாய் வழியே உள்ளே கொடுக்க வேண்டும். இதனை மாதம் 3 நாள் தர வேண்டும்.

**குந்து**

கால் வீங்கி நடக்க முடியாமல் நொண்டி, நொண்டி நடக்கும் இதற்கு 500 கிராம் முடக்காத்தான் தழையை அரைத்து 50 கிராம் பசுவெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்து பிசைந்து வாழை இலையில் கீற்று, கீற்றாக மடித்து உள்ளே உள்ளே கொடுக்க வேண்டும். இதற்கு நசியங்கட்டுதல் நல்லது.

**மடிநோய் மற்றும் அம்மை**

சோடா மாவு 50 கிராம் அளவு எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும். எலுமிச்சம் பழம் மற்றும் சாக்பீஸ் இரண்டையும் கலந்து மடி வீங்கி உள்ள இடம் முழுவதும் தடவவும். சிறிதளவு சுண்ணாம்பு, 3 கைப்பிடி பரங்கி இலை 50 கிராம் மஞ்சள் தூள் மூன்றையும் அரைத்து மடி வீக்கத்தில் 1 வாரம் காலை, மாலை பூசினால் மடிநோய் குணமாகும். கல் போன்று உள்ள மடி தளர்ச்சி அடைய வேலி பருத்தி இலையை அரைத்து அதனுடன் 1 புளியங்கொட்டை அளவு சுண்ணாம்பு கலந்து அதனுடன் எருக்கம் பால் 10 சொட்டு சேர்த்து பசையாக்கி மடிவீக்கத்தில் தடவ கல் போன்று உள்ள மடி கரைந்து தளர்வு கொடுக்கும். இதனை 3 நாள் செய்ய வேண்டும்.

**கன்று போட்ட மாட்டின் உறுப்பில் புண் வைத்தல் மற்றும் தொப்புள் கொடி அறுத்த புண்ணுக்கு**

கல்யாண முருங்கை இலை சிறிதளவு அரைத்து அதனுடன் கட்டி கற்பூரம் சிறிதளவு பொடி செய்து 50 மில்லி வேப்பெண்ணெயில் கலந்து மாட்டின் உறுப்பு தொப்புள் கொடி அறுத்த புண்ணில் வைத்தால் புழு வெளியே வந்து விடும். இதனை ஒரு வாரம் செய்து வர புண் ஆறிவிடும். கோமாரியால் ஏற்படும் புண்ணிற்கும் இவ்வாறு செய்தல் நன்று.

**உண்ணிக்கு**

வசம்பு 100 கிராம் ஊற வைத்து அரைத்து அதனுடன் 100 மி.லி. வேப்பெண்ணெய் கலந்து மாடு மற்றும் ஆட்டுக்கு ரோமத்தின் எதிர்புறம் தேய்த்து விட வேண்டும். இதனை இரவில் தேய்த்து பகலில் சுடு நீரில் மாடு மற்றும் ஆட்டை குளிக்கச்செய்தல் வேண்டும். இவ்வாறு 3 நாட்கள் செய்தால் உண்ணி ஒழிந்து விடும்.

**தண்ணீர் கழிச்சல்**

ஊமத்தங்காய் முற்றியது 1 எடுத்து அதனை கல்லில் வைத்து முள்ளை தேய்த்து 1 தட்டு தட்டி நாக்கை இழுத்து உள்ளே கொடுக்க உடனே கழிச்சல் நின்று விடும். இதனை இளங்கன்றுக்கு கொடுக்க வேண்டாம்.

**பால் கரக்கும் காம்பில் மரு வந்தால் மற்றும் காம்பு வெடிப்பு ஏற்பட்டால்**

வசம்பு 100 கிராம் ஊற வைத்து அரைத்து மஞ்சள் தூள் கலந்து அதனுடன் 50 மி.லி. வேப்பெண்ணெய்

கலந்து மடியில் தடவ ஒரு வாரத்தில் மரு மற்றும் காம்பு வெடிப்பு குணமாகும்.

**சினை தங்காமை**

கொள்ளு மற்றும் கொண்டைக்கடலை 250 கிராம் ஊற வைத்து முளை கட்டி 10 நாள் உள்ளே தர வேண்டும். மலைவேம்பு 50 கிராம், கருஞ்சீரகம் 50 கிராம், இரண்டையும் அரைத்து வாரம் ஒரு நாள் 5 வாரம் உள்ளே கொடுக்க வேண்டும். மனிதனின் மலட்டு நோய்க்கு இது சிறந்த மருந்து இதனை 5 நாள் காலை வெறும் வயிற்றில் நெல்லிக்காய் அளவு குளிர்ந்த நீரில் கலந்து சாப்பிட வேண்டும். இதனை சாப்பிடும் பொழுது அசைவம் தவிர்க்க வேண்டும்.

**மடி காம்பு வெடிப்பு**

வெட்டுவாத்தலை தேவையான அளவு எடுத்து அரைத்து அதில் 50 மி.லி. நல்லெண்ணெய் கலந்து அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூள் கலந்து வெடிப்பு ஏற்பட்ட காம்பில் தடவ மடி காம்பு வெடிப்பு குணமாகும்.

**கழிச்சலுக்கு**

கசகசா 50 கிராம், நாவல் மரப்பட்டை 50 கிராம், மாம்பட்டை 50 கிராம், வாழைப்பூ சிறிதளவு, சீவல்பாக்கு சிறிதளவு கற்பூர வெற்றிலை 10 அனைத்தையும் அரைத்து 1 லிட்டர் தண்ணீரில் கொடுத்தால் கழிவது நின்று விடும். ஆவாரம் பூ மற்றும் இலையை அரைத்து 1/4 லிட்டர் தண்ணீரில் கலந்து கொடுக்க கழிச்சல் உடனே சரியாகும்.

**நஞ்சுக்கொடி உண்டால்**

மாடு கன்று போட்டவுடன், நஞ்சுக்கொடி போட்டு அதனை தின்று விட்டால் எள் செடி 1/2 கிலோ அரைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**கோமாரி நோய்க்கு**

கோமாரி நோய்க்கு கம்பு இடித்துச்சோறு ஆக்கி தண்ணீரில் போட்டு, பன்றிக்கொழுப்பு 50 மி.லி. கம்பங்கஞ்சியில் கலந்து சாப்பிட கொடுத்தால் 3 நாட்களில் கோமாரி குணமாகி விடும்.

**அம்மைப்புண்ணுக்கு**

அம்மையினால் வந்த புண்ணில் பன்றி எண்ணெய் தடவி வர புண் குணமாகும்.

**கண்ணில் புரை**

கண்ணில் பூ வளர்ந்தால் குறிஞ்சாதழை சிறிதளவு எடுத்து அதனை உள்ளங்கையில் வைத்து கசக்கினால் சோப்பு நுரை போன்று வரும். அந்த நுரையை கண் புரையில் காலை, மாலை தேய்த்தால் 5 நாட்களில் அந்த பூ உரிந்து வந்து விடும். பனைமர இளம் மட்டையை வெட்டி அதனை கருக்கி சீவி மட்டையின் அடியில் சுத்தியல் கொண்டு தட்டினால் அதில் நுரை போன்று சாறு வரும். அதனை பூ விழுந்த கண்ணில் காலை, மாலை ஊற்றி வர 5 நாட்டிகளில் சரியாகும்.

**தேள்கடி, பாம்புகடிக்கு**

சிறியாநங்கை, வால்மிளகு, கருஞ்சீரகம், திப்பிலி, மாசிக்காய் அனைத்தையும் அரைத்து பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

தேள் அல்லது பூரான், பாம்பு கடித்தால் ஒரு புளியங்கொட்டை அளவு எடுத்து சாப்பிட்டால் நெறிகட்டாமல் மேலும் விஷம் ஏறாமல் இருக்கும்.

**முழங்கால் வலிக்கு**

வேலத்தழை, புண்ணாக்கு பூண்டு (தவசி முருங்கை) இரண்டையும் அரைத்து முழங்கால் வலி உள்ள இடத்தில் பூசி வர வலி நிற்கும்.

**குழந்தை சளிக்கு**

தேங்காய் எண்ணெய் ஒரு டீஸ்பூன் சூடு செய்து பச்சைக்கற்பூரம் 1, முருங்கைப்பூ 5 எடுத்து எண்ணெயில் போட்டு சிறிது கொதிக்க வைத்து பிறகு ஆற வைத்து தினமும் காலை, மாலை 3 நாள் மூக்கில் 2 சொட்டு விட சளி இறங்கும்.

கற்பூரவள்ளி, துளசி இலை இரண்டையும் கசக்கி 1 பாலாடை சாறு எடுத்து தினமும் குழந்தை குடிக்கும் பாலில் கலந்து கொடுத்து வர சளி நீங்கி நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும்.

**கால்நடைகளுக்கு நீர் பிரியாமை:** நசியங்கட்டுதல் நன்று

**வயிறு உப்பிசத்திற்கு** : புளி 250 கிராம் விளக்கெண்ணெய் 100 மி.லி. கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

**தாடை வீக்கம் :** 200 கிராம் முடக்கத்தான் இலை, பிரண்டை 50 கிராம் அரைத்து அதில் சிறிதளவு வெண்ணெய் கலந்து தாடையில் தடவ வேண்டும். மீதம் உள்ளதை உள்ளே கொடுக்க வேண்டும். பிரண்டை தேவையான அளவு எடுத்து அதனை அம்மியில் வைத்து தட்டி வேப்பெண்ணெய் 150 மி.லி. சூடு செய்து அதில் பிரண்டை தட்டியுள்ளதை சேர்த்து வதக்கி ஒரு துணியில் இட்டு தாடையில் சூடு வர தேய்க்க வேண்டும். இதனை 5 நாள் காலை மாலை செய்து வர தாடை வீக்கம் குணமாகும்.

### பொடுகு

தலையில் பொடுகு நீங்க மருதாணி, சோற்றுக்கற்றாழை, வெந்தயம், செம்பருத்தி, சின்ன வெங்காயம் இவை அனைத்தையும் அரைத்து தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் கழித்து குளிக்க வேண்டும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்தால் முடி உதிர்வு மற்றும் பொடுகு தவிர்க்கலாம்.

### வெட்டைச் சூடு

அம்மன் பச்சரிசி இலையை அரைத்து காலை, மாலை வெறும் வயிற்றில் குடித்தால் பெண்களின் வெட்டைச் சூடுபடுதல் குணமாகும். தொடர் இரத்தப் போக்கு ஏற்பட்டால் இவ்வாறு செய்வது மிக நன்று.

கோவிந்தன், அயோத்தியாபட்டிணம்,
சேலம் மாவட்டம். செல் : 9364222098

தொகுப்பு : சங்கீதா, சேவா

## கால்நடை மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகள்

ஜனவரி – மார்ச் 2025 நம் வழி வேளாண்மையில் உள்ள கால்நடை மூலிகை வைத்ய செயலியில் வரும் வைத்ய முறைகளின் தொடர்ச்சி பின்வருமாறு :

### 25. சிறுநீர் பிரியாதிருத்தல் / சிறுநீரில் ரத்தம் கலந்து வருதல்

அறிகுறிகள்: மாடுகள் சிறுநீர் கழிப்பதில் சிரமப்படும். சிறிது, சிறிதாக கழிக்கும். பற்களை கடித்துக் கொண்டே இருக்கும், மேலும் மாடுகள் கூனிக்கொண்டு காணப்படும். சிறுநீர் முழுவதுமாக வெளிப்படாது.

தேவையானபொருட்கள் : நான்கு மூலிகை மருத்துவ முறைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றது.

முருங்கை இலை – ஒரு கிலோ, சோற்றுக்கற்றாழை மடல் – ஒன்று, மஞ்சள் – 25 கிராம், கீழாநெல்லி – 200 கிராம், வில்வ இலை, பழைய புளி, சிறிய வெங்காயம் இம்மூன்று வகைக்கு 200கிராம், நல்லெண்ணெய் – 100 மில்லி. நெருஞ்சிச்செடி – 100 கிராம், கண்ணுப்பிள்ளை செடி என்ற கூரைப்பூ – 50 கிராம், மிளகு 50 கிராம்.

மருந்து தயாரிப்பு மற்றும் சிகிச்சை முறை:

1) முருங்கை இலையை நீர் விட்டு விழுதாக அரைத்து மாடுகளுக்கு அரைத்துக் கொடுக்க சிறுநீர் தடை இன்றி பிரியும். 2) சோற்றுக்கற்றாழை, மஞ்சள், கீழாநெல்லி மூன்றையும் அரைத்துக் கொடுக்கவும். 3) வில்வ இலை, புளி, சிறிய வெங்காயம் மூன்றையும் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து, இதோடு ஒரு லிட்டர் நீராகாரம் கடந்து கொடுக்க சிறுநீரில் ரத்தம் கலந்து வருதல் நிற்கும். 4)நெருஞ்சி, கூரைப்பூ, மிளகு மூன்றையும் அரைத்து, அரை லிட்டர் நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

### 26. குதிரை வலிப்பு நோய்

அறிகுறி: கால்நடைகளின் கால்கள் சுண்டி இழுக்கும். மார்பில் வலி இருக்கும். கண்கள் சுருங்கி காணப்படும்.

தேவையானப் பொருட்கள்: வேலிப்பருத்தி இலை – 400 கிராம், வேப்பெண்ணெய் – 700 மில்லி

சிகிச்சை முறை: 1) வேலிப்பருத்தி இலையை (200 கிராம்) நன்கு அரைத்து இதோடு 200 மில்லி வேப்பெண்ணையில் குழைத்து உள்ளே கொடுக்க வேண்டும். 2) அரை லிட்டர் வேப்பெண்ணையை நன்கு சூடாக்க வேண்டும். வேலிப்பருத்தி இலையை (200 கிராம்) துணியில் கட்டிக் கொள்ள வேண்டும். இதை சூடு செய்யப்பட்ட வேப்பெண்ணையில் தோய்த்து எடுத்து கால்நடைகளுக்கு ஒத்தடம் தர வேண்டும்.

### 27. பாலில் இரத்தம் கலந்து வந்தால்:

அறிகுறிகள் : பாலில் ரத்தம் கலந்து வரும். இது மட்டுமின்றி பாலில் விரும்பத் தகாத வாசனை இருக்கும். மாடு தீவனம் எதுவும் உண்ணாமல் காணப்படும்.

தேவையான பொருட்கள்; கறிவேப்பிலை – இரண்டு கைப்பிடியளவு, முருங்கை இலை இரண்டு கைப்பிடியளவும், வெல்லம் – 100 கிராம், எலுமிச்சம் பழம் – 6, சோடா உப்பு – 100 கிராம்.

மருந்து தயாரித்தல்; கறிவேப்பிலை மற்றும் முருங்கை இலை இரண்டுடன் வெல்லம் சேர்த்து (பசை போல் ஆகும் வரை) நன்கு அரைத்தல் வேண்டும். இதை தனியாக வைத்திருக்கவும் 100 கிராம் சோடா உப்பை அரை லிட்டர் தண்ணீரில் கலந்து வைத்துக் கொள்ளவும்.

சிகிச்சை முறை; கறிவேப்பிலை, முருங்கை இலை கலவையை மாட்டின் வாய் வழியாக ஒரு நாளைக்கு இருமுறை வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும். சோடா உப்பு கரைத்த நீரை ஒரு நாள் மூன்று வேளை வீதம் கொடுக்கவும். ஒருமுறை இரண்டு எலுமிச்சம் பழங்களை பாதியாக நறுக்கி உள்ளுக்குள் கொடுக்கவும் . இதையும் மூன்று முறை கொடுக்கவும்.

குறிப்பு: இம்முறையோடு, மடி வீக்க நோய்க்கான மருத்துவ முறையையும் பின்பற்றவும்.

## 28. மூட்டு வீக்கம்

நோய் அறிகுறி:

கால்நடையால் எழுந்திருக்க முடியாது. நிற்க முடியாது. முழங்கால், மூட்டுப்பகுதி வழி மற்றும் மிருதுவாகும் தன்மை.

நோய்க்காரணம்:

மூட்டுப்பகுதியில் நீர் கோர்த்தால் மற்றும் முழங்கால், மூட்டு பகுதியில் ஏற்பட்ட வீக்கம்.

தேவையான பொருட்கள்: சோற்றுக்கற்றாழை மடல் – 100 கிராம், சுண்ணாம்பு – 10 கிராம் ( கால்சியம் ஹைட்ராக்சைடு), பிரண்டைக்கொடி (தண்டு பகுதி) – 100 கிராம், மஞ்சள் தூள் – 15 கிராம், பூண்டு – 5 பற்கள், நல்லெண்ணெய் – ஒரு லிட்டர்.

மருந்து தயாரிப்பு முறை :

குறிப்பிடப்பட்ட அனைத்துப்பொருட்களையும் ஒன்றாக சேர்த்து கூழ் போல அரைத்துக் கொள்ளவும். அரைத்த பின் இவற்றை ஒரு லிட்டர் நல்லெண்ணெயில் சேர்த்து இந்த கலவையை அடுப்பிலேற்றி சூடாக்கவும். கொதித்த பின்பு இறக்கி ஆற வைக்கவும்.

சிகிச்சை முறை:

இந்த கலவையை, பாதிப்பு ஏற்பட்ட மூட்டு மற்றும் முழங்கால் பகுதியில் அழுத்தமின்றி மெதுவாகப் பூசவும். பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் ஒரு நாள் இரண்டு முறை சுடுநீரால் ஒத்தடம் கொடுக்கவும்.

## 29. மாடுகள் எழுந்திருக்க முடியாது இருத்தல்:

அறிகுறிகள்:

மாடுகளால் எழுந்திருக்க முடியாது. படுத்த நிலையில் காணப்படும். முன்னங்கால்களை அசைத்துக் கொண்டே இருக்கும். இதைக் குணப்படுத்துவதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு மருத்துவ முறைகளையும், தனித்தனியே தயார் செய்து ஒரே சமயத்தில் பயன்படுத்த வேண்டும்.

மருத்துவ முறை – 1

தேவையான பொருட்கள்:

நாட்டுக்கோழி முட்டை – 2, முருங்கை இலை – நான்கு கைப்பிடி அளவு, பிரண்டை – நான்கு கைப்பிடி அளவு, வெல்லம் – ஒரு துண்டு (50 கிராம்)

மருந்து தயாரிப்பு:

குறிப்பிடப்பட்ட முருங்கை இலை மற்றும் பிரண்டை இரண்டையும் தனித்தனியாக அரைத்து, வெல்லத்தை சேர்த்து இரண்டையும் குழைத்துக் கொள்ள வேண்டும்.

சிகிச்சை முறை:

இரண்டு நாட்டு கோழி முட்டைகளை உடைத்து மாட்டின் வாயில் ஊற்ற வேண்டும். ஒரு நாள் மூன்று முறை (ஆறு முட்டைகள்) கொடுக்க வேண்டும். கைப்பிடி அளவு கறிவேப்பிலை, பிரண்டை, முருங்கை இலை, அகத்திஇலை, தழுதாலை எடுத்துக் கொள்ளவும். இத்துடன் 200 கிராம் தென்னம்பாளையை சேர்த்து அரைத்துக் கொள்ளவும். அரைத்து கலவையை அரை லிட்டர் தேங்காய் பாலில் கலந்து உள்ளுக்குள் கொடுக்கவும்.

மருத்துவ முறை: 2

தேவையான பொருட்கள்: கற்பூரவள்ளி இலை, துளசி இலை, மூங்கில் இலை, நொச்சி இலை, மாவிலங்க இலை, எருக்கு மொட்டு இவை கைப்பிடி அளவு வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும். சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம் இவை வகைக்கு – 30 கிராம், இலுப்பை பிண்ணாக்கு கால் கிலோ.

மருந்து தயாரிப்பு: மேற்கு குறிப்பிடப்பட்ட அனைத்து பொருட்களையும் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும்.

சிகிச்சை முறை: அரைத்த விழுதை ஒரு நாள் இரண்டு முறை வீதம் 15 – நாட்கள் வரை உள்ளுக்குள் கொடுக்க வேண்டும்.

குறிப்பு: நான்கு நாட்கள் வரை பாதிக்கப்பட்ட மாட்டை எழுப்ப முயற்சித்தல் வேண்டாம்.

## 30. பூச்சிக்கொல்லி நச்சுத்தன்மை/சயனைடு நச்சு/ காளான் நச்சேற்றம்:

அறிகுறிகள்: நீண்ட மூச்சு மற்றும் ஆழ்ந்த பெருமூச்சு, கண்கள் விரிந்த நிலையில் காணப்படும். வாயில் நுரை தள்ளும்.

தேவையான பொருட்கள்:

1) வெற்றிலை – 10, மிளகு – 10 கிராம், உப்பு – 10 கிராம், வெல்லம் – 50 கிராம்.

2) புளி – ஒரு கிலோ, தண்ணீர் ஒரு லிட்டர், முருங்கை இலை சாறு – முக்கால் லிட்டர், வெல்லம் – 100 கிராம்.

மருந்து தயாரிப்பு:

1) முதலில் வெற்றிலை, மிளகு, உப்பு மூன்றையும் ஒன்றாக சேர்த்தரைத்து, வெல்லம் சேர்த்து தனியாக வைத்துக் கொள்ளவும்.

2) புளியை நீரில் ஊற வைத்து, ஊறவைத்த நீரை எடுத்து, இதோடு முருங்கை இலை சாறைச்சேர்த்து, ஒரு லிட்டர் தண்ணீர் சேர்த்து கலந்து கொள்ளவும்.

சிகிச்சை முறை: முதலில் வெற்றிலைக் கலவையை மாடுகளுக்குத்தர வேண்டும். அதன் பின் புளிக்கரைசலை 200 மில்லி வீதம் 2 மணி நேரத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டும். அதன் பின் இந்த நேரத்திற்கு இடைவெளியில் மீண்டும் வெற்றிலைக்கலவையை கொடுக்க வேண்டும் இப்படி இரண்டு கலவை மருந்துகளையும் நான்கு முறை வீதம் கொடுக்க வேண்டும்.

**31. தோல் நோய்**

அறிகுறிகள்: கால்நடையின் மேல் பகுதியில் அங்காங்கே ரோமம் உதிர்ந்திருக்கும். மேலும் தோல்பகுதியில் சிறு சிறு பத்து போல காணப்படும்.

சிகிச்சை முறை:

1) கைப்பிடி அளவு சீமை அகத்தி இலையை எடுத்து நன்கு அரைக்கவும், அரைக்கும் போது இரண்டு எலுமிச்சம் பழங்களை எடுத்து சாறு பிழிந்து, சாறை இதோடு சேர்த்துக் கொள்ளவும். நன்கு அரைத்த பின் மாடுகளின் மேல் தோல் பகுதியில் வெளிப்பூச்சாக பூசிட வேண்டும். பாதிப்பு குணமாகும் வரை செய்து வரலாம்.

2) கொல்லங்கோவை கிழங்கு மற்றும் சிறிய வெங்காயம் இரண்டையும் 200 கிராம் வீதம் எடுத்து, அரை லிட்டர் தண்ணீரில் கலந்து, கொதிக்க வைத்து, ஆறிய பின் மாடுகளுக்கு உள்ளே கொடுக்கவும்.

3) கைப்பிடி அளவு விழுதி இலை, சிறிய வெங்காயம் 100 கிராம் மற்றும் 15 கிராம் சீரகம் எடுத்து மூன்றையும் சேர்த்து நன்கு அரைத்து மூன்று வேளை உள்ளுக்குள் தர வேண்டும்.

**32. சுளுக்கு**

அறிகுறிகள்: கால் வலி மற்றும் தள்ளாட்டம், மாடுகளால் நடக்க இயலாது.

காரணம்: கால் இடறி விழுவதாலும், அடிபட்டதாலும், சுளுக்கு ஏற்படுவதாலும் இந்நிலை ஏற்படும்.

தேவையான பொருட்கள்; தவிடு – 250 கிராம், நாவல் மரப்பட்டை – 100 கிராம், மருதாணி இலை – 100 கிராம்.

சிகிச்சை முறைகள்:

1) தவிடை வறுத்து சூட்டோடு, மாடுகளுக்கு சுளுக்கு ஏற்பட்ட இடங்களில், கால் அல்லது முதுகு, கழுத்துப் பகுதிகளில் ஒத்தடம் கொடுத்து வர வேண்டும்.

2) நாவல் மரப்பட்டையை நன்கு அரைத்து சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் பூசி பத்து போடவேண்டும்.

3)சுளுக்கு மட்டுமின்றி வீக்கமும் ஏற்பட்டிருந்தால், மருதாணி இலைகளை அரைத்துப் பூசி வந்தால் சுளுக்கு மற்றும் வீக்கம் வத்திவிடும்.

**33. வெறி நாய்க்கடி**

அறிகுறிகள்: வெறிநாய் கடித்ததன் காரணமாக மாடுகளில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படும். மற்றும் ஈக்களை துரத்தும். கன்றுக்குட்டியை கடிக்கும். வாயில் உமிழ்நீர் வடிந்து கொண்டே இருக்கும். கண்ணாடியை காட்டினால் பாய வரும்.

தேவையான பொருட்கள்: ஈஸ்வரி மூலிகை வேர், அழிஞ்சில் மரப்பட்டை, பீமரப் பட்டை மூன்றும் தலா 5 – கிராம் வீதம், மணத்தக்காளி கைப்பிடியளவு, பேய்மிரட்டி இலை கைப்பிடியளவு, நாயுருவி இலை சிறிது சுண்ணாம்பு வேப்பெண்ணெய் – 50 மில்லி.

சிகிச்சை முறை:

1) உரிக்கட்டி வேர் என்ற ஈஸ்வர மூலிகை வேர், அழிஞ்சில் மரப்பட்டை பீமரப்பட்டை மூன்றையும் சேர்த்து அரைத்து, ஒரு கப் ஆட்டுப்பாலில் கலந்து மாட்டிற்கு உள்ளே கொடுத்தல் வேண்டும்.

2) மணத்தக்காளி இலைகளை வேப்பெண்ணையில் வதக்கி கடிவாயில் வைத்து கட்ட வேண்டும். இத்துடன் பேய்மிரட்டி இலையை இடித்து இரண்டு கப் சுடுநீரில் கலக்கி உள்ள கொடுக்க வேண்டும். இதை ஏழு நாட்கள் தொடர்ந்து உள்ளே கொடுத்தல் வேண்டும்.

3) கைப்பிடி அளவு நாயுருவி இலைகளை எடுத்து நன்கு அரைத்து, இரண்டு கப் வெள்ளாட்டுப் பாலில் கலந்து தினசரி மாலை ஒரு வேளை வீதம் ஏழு நாட்களுக்கு இதே போல், இதே அளவில் உள்ளுக்கு கொடுத்து வர வேண்டும்.

4) கைப்பிடியளவு நாயுருவி இலைகளை எடுத்து அரைத்து சாறு எடுத்து, இச்சாறை சுண்ணாம்புடன் குழைத்து, நாய் கடித்த இடத்தில் பூசி வரவேண்டும்.

## 34. தவளை நோய்

அறிகுறிகள்: பாதிக்கப்பட்ட கால்நடை தத்தி, தத்தி நடக்கும். தடுமாறி நடக்கும். தவளை போல் இதன்

செயல்பாடு இருக்கும். படுத்தபின் கால்நடையால் எழுந்திருக்க முடியாது. தொப்புள், மார்பு, போன்ற பகுதிகளில் கட்டி போல வீக்கம் காணப்படும்.

தேவையான பொருட்கள்: வாதமடக்கி இலை ஒரு கிலோ, சிறிய வெங்காயம் ¼ கிலோ, சீரகம் 100 கிராம், சுண்ணாம்புக்கல் ஒரு கிலோ, கற்பூரவள்ளி இலை சங்கங்குப்பி இலை வகைக்கு 200 கிராம், கல்லுப்பு, மிளகு, ஓமம், மஞ்சள் இவை வகைக்கு 10 கிராம்.

சிகிச்சை முறைகள்:

1) பொதுவாக சுண்ணாம்புச் சத்துக் குறைபாட்டாலும் இந்நோய் ஏற்படும் என்பதால், நோய் வருவதற்கு முன்பாகவே, அடிக்கடி சுண்ணாம்புக்கல் நீர் கொடுத்து வரலாம். ஒரு சுத்தமான மண் சட்டியில், 10 லிட்டர் நீரில், ஒரு கிலோ சுண்ணாம்புக்கல் ( கால்சியம் ஹைட்ராக்சைடு) சேர்த்து கரைக்க வேண்டும். இந்த கரைசலை ஓர் இரவு முழுவதும் அப்படியே வைத்திருக்கவும். மறுநாள் காலை இந்த கரைசல் நீரில் இருந்து 200 மில்லி அளவு தெளிந்த சுண்ணாம்பு நீரை எடுத்து, மாடுகளின் குடிநீர் தொட்டியில் கலந்து குடிக்க விட வேண்டும். இதே அளவில் தினசரி கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

2) தயாராக உள்ள வாதமடக்கி இலை (முடநாரி) – ஒரு கிலோ, சிறிய வெங்காயம் – கால் கிலோ, சீரகம் – 100 கிராம் மூன்றையும் அரைத்து ஒரு லிட்டர் நீரில் கலந்து கொள்ள வேண்டும். இந்த நீரை காலை, மாலை இரண்டு வேளை பாதி, பாதியாக நோய் குணமாகும் வரை கொடுத்து வர வேண்டும்.

3) கற்பூரவள்ளி இலை, சங்கங்குப்பி இலை இவற்றின் இலைகளை இடித்து சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். இச்சாறோடு – கல் உப்பு, மிளகு, ஓமம், மஞ்சள் – நான்கையும் சேர்த்தரைத்து கலந்து கொள்ள வேண்டும். இந்த சாற்றை ஒரு நாளைக்கு இரண்டு வேளை வீதம் ஒரு வாரத்திற்கு கொடுக்க வேண்டும்.

### 35. குதிரை வலிப்பு நோய்

அறிகுறி: கால்நடைகளின் கால்கள் சுண்டி இழுக்கும். மார்பில் வலி இருக்கும். கண்கள் சுருங்கி காணப்படும்.

தேவையானப் பொருட்கள்:

வேலிப்பத்ருதி இலை – 400 கிராம்

வேப்பெண்ணை – 700 மில்லி

சிகிச்சை முறை:

1) வேலிப்பருத்தி இலையை (200 கிராம்) நன்கு அரைத்து இதோடு 200 மில்லி வேப்பெண்ணையில் குழைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

2) அரை லிட்டர் வேப்பெண்ணையை நன்கு சூடாக்க வேண்டும். வேலிப்பருத்தி இலையை (200 கிராம்) துணியில் கட்டிக் கொள்ள வேண்டும். இதை சூடு செய்யப்பட்ட வேப்பெண்ணையில் தோய்த்து எடுத்து கால்நடைகளுக்கு ஒத்தடம் தர வேண்டும்.

### 36. அரணைக்கடி

அறிகுறிகள்: மாடுகளின் வால் பகுதி தடித்துக் காணப்படும். வாலில் ரோமங்கள் இருக்காது. தனது வாலை தானே கடித்துக் கொள்ளும். காலால் கண்களை தேய்த்துக் கொள்ளும் அதிகமான பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் மாட்டின் வால்தாழ்ந்து விடும் சூழல் ஏற்படும்.

தேவையான பொருட்கள்:

வெளி மருந்து : ஆடுதின்னாப்பாளை இலை, கசக்க முட்டி (பேய்மிரட்டி) இலை, வேப்பெண்ணெய் – 250 மில்லி, நெய் – 50 கிராம், வரிகுமட்டிக்காய் 2.

உள் மருந்து: சிறியாநங்கை, ஆடாதொடை இலை வகைக்கு 10 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 30 – கிராம்.

சிகிச்சை முறை:

வெளி மருந்து:

1) ஆடு தின்னாப்பாளை இலை, கசக்க முட்டி இலைச் சாறு இரண்டையும் அரைத்து – 250 மில்லி சாறு எடுத்துக் கொள்ளவும். இதோடு 250 மில்லி வேப்பெண்ணையை சேர்த்து காய்க்கவும், மிதமான சூட்டில் பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும்.

2) இரண்டு வரிகுமட்டிக்காயில் உட்புற சதையை எடுத்து பாதிக்கப்பட்ட இடத்தில் தடவவும்.

3) 50 கிராம் ஆடுதின்னாப்பாளை இலையை அரைத்து நெய்யுடன் (50 கிராம்) கலந்து பாதிக்கப்பட்ட இடத்தில் பூசவும்.

உள் மருந்து:

1) சிரியாநங்கை இலை, ஆடாதொடை இலை (10 கிராம் – வீதம்) எடுத்து மற்றும் இதோடு சுக்கு, மிளகு, திப்பிலி (10 கிராம் வீதம்) சேர்த்து ஒரு லிட்டர் நீரிலிட்டு கஷாயமாக காய்ச்சி, இதை இரண்டு வேளையாக மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு கொடுக்கவும்.

2) பஞ்ச தீபாக்கினி சூரணம் – 30 கிராம் வீதம் இரண்டு வேளை ஐந்து நாட்களுக்கு கொடுக்கவும்.

## 37. அடிபட்ட வீக்கம், இரத்தக்கட்டு

அறிகுறிகள்: உடலில் அடிபட்டிருத்தல், வீக்கம், கட்டி, வழி மற்றும் இரத்தக் கட்டு, கட்டியானது கனமாக இருக்கும் கட்டிகள் நிறம் மாறும்.

காரணம்:

கால்நடைகள் மேய்ச்சலுக்கு செல்லும்போது கீழே விழுதல், மாடுகள் ஒன்றுடன் ஒன்று முட்டிக் கொள்ளுதல், மற்றும் பள்ளங்களில் தடுமாறி கீழே விழுதல்.

தேவையான பொருட்கள்:

j É L - ¼ கிலோ, முடக்கத்தான் – 100 கிராம், பிரண்டை – 100 கிராம், பூண்டு – 10 கிராம், வெற்றிலை – ஐந்து, ஆடாதொடை, துளசி இரண்டும் வகைக்கு 50 கிராம், சீரகம் – 15 கிராம்.

சிகிச்சை முறை:

1) தவிடை நன்கு வறுத்து, துணியில் கட்டி மிதமான சூட்டில் ஒத்தடம் கொடுக்க வேண்டும்.

2) முடக்கத்தான், பிரண்டை (வகைக்கு 100 கிராம்) மற்றும் பூண்டு மூன்றையும் சேர்த்து அரைத்து பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் இரண்டு வேளை பத்து போட வேண்டும். மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை பத்து போடலாம்.

3) வெற்றிலை 5, ஆடாதொடை, துளசி (இரண்டும் வகைக்கு 50 கிராம்), சீரகம் (15 கிராம்) இவற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் சேர்த்து, தண்ணீர் பாதியாகும் வரை காய்ச்சி, 250 மில்லி அளவு (பாதி) வீதம் ஒரு நாளை இரண்டு வேளை உள்ளுக்குள் கொடுக்கவும். இப்படி ஐந்து நாட்கள் கொடுக்க வேண்டும். (ஒரு வாரம் வரை மாடுகளின் உடல் மேல் தண்ணீர் படக்கூடாது)

## 38. சொக்கிக்கொள்ளுதல்

அறிகுறிகள்:

மாடுகளின் வயிறு ஊதி இருக்கும். சோர்வாக இருக்கும். இரை எதுவும் எடுக்காது.

தேவையான பொருட்கள்:

புளி – 200 கிராம், சர்க்கரை – 200 கிராம், துத்தி இலை – 100 கிராம், திரிகடுகு சூரணம் – 30 கிராம், உப்பு – 20 கிராம்.

சிகிச்சை முறை:

1) ஒரு லிட்டர் தண்ணீரில், புளி (200 கிராம்), சர்க்கரை (200 கிராம்) கரைத்து மாடுகளுக்கு, உள்ளே கொடுக்கவும்.

2) 100 கிராம் துத்தி இலைகளை அரைத்து 250 மில்லி தண்ணீரில் கலக்கவும். இதோடு உப்பு – 20 கிராம் கலந்து, இக்கலவையை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறையாக இருவேளை கொடுக்கவும்.

## 39. கொம்பு முறிவு

அறிகுறிகள் :

விபதுக்கள் ஏற்படுதல், மாடுகள் முட்டிக் கொள்வதால், கொம்பு முறிதல், மண்டைக்கரைப்பான் போன்ற காரணங்களால் கொம்பு முறிவு ஏற்படும்.

வைத்திய முறை :

1) கூரைப்புகை (ஒட்டடை) சீனி சேர்த்து கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும்.

2) வெட்டுக்காயப்பூண்டு (100 கிராம்), மஞ்சள் தூள் (10 கிராம்) எடுத்து இரண்டையும் சேர்த்து அரைத்து தேங்காய் எண்ணெயில் கலந்து பத்து போடவும்.

3) ஆலம்பால் அல்லது திருகுகள்ளிப்பாலில் காட்டன் துணியை நனைத்து ஒடிந்த கொம்பு பகுதியில் சுற்றி விடவும்.

4) மத்தான் தைலத்தை கொம்பு ஒடிந்த இடத்தில் தடவவும்.

குறிப்பு : ஒரு வாரம் மழையில், தண்ணீரில் மாடுகளை நனைய விடக்கூடாது.

## 40. மாடு கனைத்தல் அல்லது செருமல்

அறிகுறிகள்:

மாடு செருமிக் கொண்டும் கனைத்துக் கொண்டும் இருக்கும். தொண்டை வீக்கமாக இருக்கும்.

வைத்திய முறை:

1) ஆடாதொடை 10 கிராம், துளசி 10 கிராம், இஞ்சி 10 கிராம் சேர்த்து அரை லிட்டர் நீரில் போட்டு காய்ச்சி ஆற வைத்து இதோடு சர்க்கரை 20 கிராம், கலந்து இரண்டு வேளை விதம் 3 முதல் 5 நாட்கள் வரை கொடுக்கவும்.

2) திரிகடுகு சூரணம் 30 கிராம், சர்க்கரை 10 கிராம் இரண்டையும் கலந்து ஒரு நாளைக்கு ஒருவேளை வீதம் 3 நாட்கள் கொடுக்கவும்.

## 41. படுத்த மாடு எழுந்திருக்காமல் இருந்தால் அல்லது சினை மாடு திடீரென விழுதல்

அறிகுறிகள்: தலையை தொங்க விட்டிருக்கும். மாடு சோர்வாக காணப்படும். கால்கள் நடுங்கிக்

கொண்டே இருக்கும். கால் நிலையாக நிற்காது. கால் மடங்கிவிடும் முன்னங்கால் பகுதியில் முதலில் பாதிப்பு ஏற்படும். அசைபோடாது. கண்கள் சொருகிக்காணப்படும். மண்ணை தின்னும்.

வைத்திய முறை:

1) கல் உப்பு ஒரு கைப்பிடி எடுத்து வாயில் போட்டு சரி செய்யலாம். மூன்று நாட்டு முட்டைகளை எடுத்து ஒருவேளை இரண்டு நாட்களுக்கு கொடுக்கலாம்.

2) கறிவேப்பிலை ஒரு கைப்பிடி, பிரண்டை ஒரு கைப்பிடி, முருங்கைக் கீரை ஒரு கைப்பிடி, அகத்திக்கீரை ஒரு கைப்பிடி, தழுதாழை ஒரு கைப்பிடி, தென்னம்பாளை 200 கிராம் இவைகளை சேர்த்து அரைத்து தேங்காய் பால் ½ லிட்டர் சேர்த்து கலந்து உள்ளே கொடுக்கவும்.

## 42. வாத நோய்

உள்மருந்து: வேலிப்பருத்தி இலை 200 கிராம் அரைத்து, 200 மில்லி வேப்பெண்ணையில் கலந்து உள்ளே கொடுக்கவும்.

ஒத்தடம்:வேலிப்பருத்தி 1/4 கிலோ வாதநாராயணன் இலை 1/4 கிலோ எடுத்து துணியில் பொட்டலமாக கட்டி வேப்ப எண்ணெயில் (200 மில்லி) காய்ச்சி அதில் பொட்டலத்தை நனைத்து ஒத்தடம் கொடுக்கலாம்.

## 43. புழு வைத்த புண்ணுக்கு

அறிகுறிகள்: மாடுகளுக்கு கட்டிகள் உருவாகி இது உடையும் போது புண்கள் வரும். அதில் புழுக்கள் உருவாகிவிடும்.

மருத்துவம்: 1) நிலக்கடம்பு, செருப்படை, வெட்டு காயப்பூண்டு, நொச்சி, வேப்பிலை, இவைகளை கைப்பிடி வீதம் எடுத்து – இடித்து சாறு எடுக்கவும். (சுமார் 200 மில்லி), இதை 200 மில்லி வேப்பெண்ணையில் போட்டு, காய்ச்சி புண்களின் மேல் ஐந்து சொட்டு வீதம் காலை மாலை ஊற்ற வேண்டும்.

2) நிலக்கடம்பு அல்லது ஊமத்தை இலைகளை 50 கிராம் வீதம் எடுத்து அரைத்து, இதோடு சுண்ணாம்பு 10 கிராம், அரைக்கரண்டி சூடம் தூள் சேர்த்து புண்களின் உள்ளே படும் படி நன்கு பூசி விடவும்.

உள் மருந்து:

அஷ்ட சூரணம் 30 கிராம் உள்ளே கொடுக்கவும்.

## 44. தொண்டை அடைப்பான்

அறிகுறிகள்:

கால்நடைகளை இந்நோய் திடீரெனத்தாக்குகிறது; மிக அதிக காய்ச்சல் காணப்படும்; கண்கள் சிவந்து இருக்கும் மூக்கிலிருந்து கோழை போன்ற திரவம் வடியும்; தொண்டை, தாடை கழுத்துப் பகுதிகளில் வலியோடு கூடிய வீக்கம் காணப்படும்.

நாக்கு வீங்கும், மூச்சுத் திணறல் ஏற்படும்; முதலில் சாணம் கட்டும், பின்பு கழிச்சல் காணப்படும்; வாயில் உமிழ் நீருடன் நுரை போன்று வழியும்; நோய் முற்றிய நிலையில் கால்நடைகள் இறக்க நேரிடலாம்.

காரணங்கள்:

இந்நோய் பாக்டீரியா, கிருமிகளால் ஏற்படுகிறது. மழைக்காலத்திற்கு பின், பனிக்காலத்திற்கு முன் இந்நோய் தோன்றி பரவுகின்றது.

வைத்தியம்:

ஆவாரம் கொழுந்து 250 கிராம், ஆவாரம் மொக்கு (பூ) 250 கிராம், வெள்ளைப் பூண்டு 250 கிராம் மூன்றையும் சேர்த்து இடித்து அம்மியில் நன்கு அரைத்து 3 வேளை தர வேண்டும். இதனை 3 நாட்கள் தொடர்ந்து செய்து வர வேண்டும்.

## 45. இரத்த கழிச்சல்

அறிகுறிகள்:

கால்நடையின் சாணத்துடன் இரத்தம் கலந்து வரும். சாணம் கெட்டியாகி ஆடை படர்ந்து இருக்கும். மாடு சோர்வாக காணப்படும்.

தேவையானப்பொருட்கள்:

குன்றிமணி இலை – 100 கிராம், புளித்த நீர் – அரை லிட்டர், ஆவாரங் கொழுந்து – 50 கிராம், மாதுளம் பழத்தோல் – 50 கிராம், சிறிய வெங்காயம் – 5, பழம்பாசி தழை – 50 கிராம், சீரகம் – 50 கிராம், மோர் – 250 மில்லி.

சிகிச்சை முறை:

1) குன்றிமணி இலை (100 கிராம்) சேர்த்து, அரை லிட்டர் புளித்த நீரில் கலந்து ஒருவேளை வீதம் 3 நாட்கள் கொடுக்கவும்.

2) ஆவாரங் கொழுந்து (50 கிராம்), மாதுளம் பழத்தோல் – (50 கிராம்), சிறிய வெங்காயம் – 5, பழம்பாசி (50 கிராம்), சீரகம் (50 கிராம்) அனைத்தையும் மறைத்து மோரில் (250 மில்லி) கலந்து உள்ளே கொடுக்கவும்.

## 46. வயிற்றுக்குள் கன்று இறந்தால்

அறிகுறி:

மாட்டின் வயிறு ஊதி இருக்கும். மாடு ஓரிடத்தில் நிலையாக நிற்காது. உறுப்புகள் வெளியில் இருக்கும். வலியால் கத்தும். கவனிக்காத நிலையில் மூச்சுத் திணறல் ஏற்படும்.

தேவையான பொருட்கள்:

யானை நெருஞ்சி – 1/4 கிலோ, எள் செடி – 1/4 கிலோ, கருப்பட்டி – 200 கிராம், எள் – 1/4 கிலோ.

சிகிச்சை முறை:

1) யானை நெருஞ்சி, எள் செடி இரண்டும் 250 கிராம் வீதம் எடுத்து அரைத்து, இதோடு கருப்பட்டி (100 கிராம்) கலந்து கொடுக்க வேண்டும்.

2) எள் 250 கிராம் வறுத்து, இடித்து இதோடு கருப்பட்டியோடு (100 கிராம்) கலந்து கொடுக்க வேண்டும்.

## 47. நுகத்தடிப்புண்ணுக்கு

அறிகுறி;

கழுத்தின் மேல் பகுதியில் புண் இருக்கும்.

வைத்திய முறை;

1) வேப்ப எண்ணெய் தேவையான அளவு தடவி வர வேண்டும்.

2) மத்தான் தைலம் போடவும்.

வைத்திய முறை;

மத்தான் தைலம் தயார் செய்து புண்ணில் தடவி வரலாம். மத்தான் தைலம் தயாரிக்க 500 மில்லி தேங்காய் எண்ணெயில் 250 மில்லி ஊமத்தை இலை சாறு விட்டு சுமார் 1 மணி நேரம் பதம் வரும் வரை காய்ச்ச வேண்டும். காய்ச்சி இறக்கியபின் ஐந்து கிராம் மயில் துத்தம் சேர்த்து கிளற வேண்டும். இதனை பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு தேவைப்படும்போது புண்கள், தோல், பத்து போன்றவற்றிற்கு மேல் பூச்சாக பூசவும்.

## 48. ஈரல் முட்டி நோய்

அறிகுறி:

மாடுகளுக்கு இளைப்பு ஏற்படும். மூக்கு வழியாக நீர் வரும். கண்கள் சிவந்து இருக்கும். ஈரல் வீங்கு– இது வெளியே தெரியாது.

சிகிச்சை முறை:

கல்லுடையான், வெற்றிலை, முசுமுசுக்கை, கல்யாண முருங்கை, வீழி இலை, சுக்கு, அதிமதுரம், கண்டங்கத்திரி பழம், மஞ்சள் தூள், இவை ஒவ்வொன்றும் வகைக்கு 10 – கிராம் வீதம் எடுத்து, ஒன்றாக சேர்த்து, அரை லிட்டர் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். பின்பு இறக்கி ஆறிய பின்பு இரண்டு வேளை வீதம் 3 அல்லது 5 நாட்களுக்கு உள்ளே கொடுத்து வரவும்.

## 49. அம்மை கொப்பளம்

அறிகுறிகள்:

ஆரம்பத்தில் மாடுகளின் வயிற்றுப் பகுதியில் கீழ்வாட்டில் தண்ணீர் கொப்பளம் போல உருவாகும். பின்பு உடல் முழுவதும் காணப்படும். மாடுகள் தீனி எடுக்காது. காய்ச்சல் இருக்கும். கண்ணில் இருந்து நீர் வடிந்து கொண்டே இருக்கும். கொப்பளங்களிலிருந்தும் நீர் வடியும்.

காரணம்:

எளிதில் கிருமிகளால் ஏற்படுகிறது.

வைத்திய முறை:

1 – உள் மருந்து:

வேப்பங்கொழுந்து, துளசி, சிறியாநங்கை, மஞ்சள் தூள், வெந்தயம், பேய்மிரட்டி( பெருந்தும்பை) இவை ஒவ்வொன்றும் வகை 50 கிராம் வீதம் எடுத்துக் கொள்ளவும், இதோடு மிளகு( 10 கிராம்) சேர்த்து சேர்த்தரைத்து உருண்டையாக உருட்டிக் கொள்ளவும். பின்பு இதை கால் லிட்டர் தேங்காய்ப்பாலில் கலந்து, இரண்டு வேளை வீதம் மூன்று அல்லது ஐந்து நாட்கள் மாட்டின் உள்ளே கொடுக்க வேண்டும்.

2 – வெளி மருந்து:

1) வெப்பாலை இலைகளை 1/2 லிட்டர் தேங்காய் எண்ணெயில் கலந்து ஐந்து முதல் ஏழு நாட்கள் வெயிலில் வைத்து மேல் பூச்சாக பூசி வரவும்.

2) கைப்பிடி அளவு துளசி, குப்பைமேனி எடுத்து இதோடு 5 பூண்டு பற்கள், ஒரு கரண்டி மஞ்சள் தூள் சேர்த்து அரைத்து, 100 மில்லி நல்லெண்ணெய் சேர்த்து காய்த்து, ஆரிய பின் மேல் பூச்சாக பூசி வரவும்.

## 50. பழுக்காத கட்டிகளுக்கு

அறிகுறிகள்:

கட்டியானது கெட்டியாக காணப்படும், கையால் அழுத்தினால் அமுங்காது.

வைத்திய முறை:

1) ஒரு கரண்டி திருக்கள்ளிப்பால் எடுத்து, சிறிதளவு சுண்ணாம்பு எடுத்து குழைத்து கட்டிகள் மேல் பூசவும்.

2) சேற்றுடன், அடுப்புக் கரித்தூள் சேர்த்து தடவலாம்.

3) வெப்பாலை அல்லது கொம்பமாலை பாலை கட்டிகள் மேல் பூசவும்

## 51. சங்கு அடைப்பான் நோய் (குரல்வளை நோய்)

அறிகுறிகள்:

மாடுகளின் கழுத்துப் பகுதி வீங்கி இருக்கும். கழுத்தை அசைக்க முடியாது, திருப்ப முடியாது. மாடுகள் இரை எடுக்காது. காய்ச்சல் இருக்கும். கத்தும் போது சத்தம் ஏற்படுவதில்லை.

சிகிச்சை முறை:

1) மிளகு – 10 கிராம், மஞ்சள் தூள் – 5 கிராம், சீரகம் – 10 கிராம், வீழி இலை – 10 கிராம், பிரண்டை – 10 கிராம் எடுத்து இவற்றை அரை லிட்டர் நீரிலிட்டு கஷாயமாக காய்ச்சவும். இதில் கால் லிட்டர் எடுத்து இரு வேளை வீதம் 3 அல்லது 5 நாட்கள் வரை கொடுக்கலாம்.

2) திரிகடுகு சூரணம் – 30 கிராம், வில்வ இலை – 100 கிராம், வில்வக்காய் – 100 கிராம் வீதம் எடுத்து – அரை லிட்டர் நீரிலிட்டு கசாயமாக காய்ச்சவும், இதில் கால் லிட்டர் எடுத்து இருவேளை விதம் 3 அல்லது 5 நாட்கள் வரை கொடுக்கவும்.

## 52. மூக்கணாங்கயிற்றினால் ஏற்படும் புண்கள்

அறிகுறிகள்:

மூக்குக்கயிறு இறுக்கமாக இருந்தால் புண் வரும். மூக்குக்கயிறு அழுத்தமாக இருந்து காற்றோட்டம் இல்லையென்றால் புண்கள் வரும். மூக்கில் இருந்து ரத்தம் வரும்.

வைத்தியம்:

1) வேப்பெண்ணெயில் (100 மில்லி), மஞ்சள் தூள் 10 கிராம், சூடம் 2 (தூள் செய்து) கலந்து மூக்கில் தடவவும்.

2)கோபுரம் தாங்கி இலை அல்லது வெட்டுக்காயப்பூண்டு இலைச் சாறுடன் சுண்ணாம்பு கலந்து மூக்கில் போடவும்.

## 53. பால் குடிக்காத கன்றுக்கு

அறிகுறிகள்:

புதிதாகப்பிறந்த கன்று பால் குடிக்காது.

வைத்தியம்:

1) பருத்திக்கொட்டை ஊறவைத்து அரைத்து 50 மில்லி பால் எடுத்து கொடுக்க வேண்டும்.

2) வடிகஞ்சியில் (100 மில்லி) உப்பு அல்லது சர்க்கரை 10 கிராம் சேர்த்து கொடுக்க வேண்டும்.

3) வடித்த கஞ்சியுடன் (100 மில்லி) பசும்பால் 50 மில்லி கலந்து கொடுக்க வேண்டும்.

## 54. குடல் வாதம்

அறிகுறிகள்:

தீவனம் எடுக்காது. வயிற்றுப் பகுதியில் இடப்புறம் சுருங்கி காணப்படும்.

வைத்திய முறை:

1) இலுப்பை இலை 200 கிராம், அத்தி இலை 200 கிராம் வீதம் எடுத்து ஒரு கப் வெந்நீரில் கலந்து உள்ளே கொடுக்கவும். ஒரு நாளைக்கு ஒருவேளை வீதம் மூன்று அல்லது ஐந்து நாட்கள் கொடுக்கவும்.

2)திரிகடுகு சூரணம் 30 கிராம் அளவில் கொடுக்கலாம்.

3)சங்கு இலை முடக்கத்தான், வேலிப்பருத்தி, வாதநாராயணன் இலைச் சாறு இவை ஒவ்வொன்றும் கைப்பிடி வீதம் எடுத்து ஒன்றாக அரைத்து, 150மில்லி தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் 3 நாட்கள் கொடுக்க வேண்டும்.

# தென்னையில் மகசூலை இரட்டிப்பாக்க அவசியமான 5 பணிகள்

### 1. மரங்களைச் சுற்றிலும் வட்டப் பாத்தி எடுத்தல்:

பயன்கள்:

மழை நீரை சேகரிக்கவும், சேகரித்த மழை நீரை சேதாரம் இல்லாமல் மரத்துக்கு வழங்கவும், வட்டப்பாத்தி எடுக்கிறோம். இதனால் மரத்தைச் சுற்றி நாம் பாய்ச்சுகின்ற ஒவ்வொரு லிட்டர் தண்ணீரையும் பயனுள்ள வகையில் மரத்துக்கு கொடுக்கலாம்.

செய்முறை:

மரத்தின் தூரில் இருந்து 3 அடி தூரம் வரையுள்ள வேர்கள் கனமானவை. இந்த மரமானது காற்றில் சாய்ந்து விடாமல் தாங்கிப் பிடிக்கும் முட்டு வேர்கள். 3½ அடியில் இருந்து 6 அடி தூரம் வரையுள்ள பகுதியில் மயிரிலைப்போன்ற நிறைய சல்லி வேர்கள் காணப்படுகின்றன. இவையே மரத்துக்கு தேவையான தண்ணீரையும், உரச்சத்துக்களையும் உறிஞ்சி அனுப்புகின்றன. இப்பகுதியில் நாம் ½ அடி

ஆழத்திற்கு வட்டமாக கிண்ணம் போல பள்ளம் எடுக்கவேண்டும்.

மரத்தில் இருந்து வடிகின்ற மழை நீர் முழுவதும் இந்த கிண்ணப்பகுதிக்கு வந்து சேருமாறு உள்ப்பகுதியை சாய்வாக அமைக்க வேண்டும். அதாவது பள்ளம் எடுக்கும்போது கிடைக்கும் மண்ணை கிண்ணத்திற்கு வெளியேயும், உள்ளேயும் போடவும். மரத்தை சுற்றியுள்ள பகுதியில் கொஞ்சம் மேடாக போட்டு, கிண்ணப் பகுதியானது பள்ளமாக இருக்குமாறு சரிவு அமைத்துக் கொடுக்கவும். இதனால் பெய்யும் மழைநீர் அனைத்தும் கிண்ணத்துக்குள் வந்து சேரும். (அதே சமயத்தில் தென்னை மரத்தின் தூர்ப்பகுதியில் மண்ணை குவிக்கக்கூடாது, குவித்தால் அங்கே புது வேர்கள் உருவாகும், பின்பு அம்மண்ணானது மழைநீரில் கரைந்து வெளியேறும் போது புது வேர்கள் காயும். தேவையில்லை).

நமக்கு கிடைக்கின்ற கொஞ்ச தண்ணீரையும் இந்த வட்டப் பாத்திக்குள் தான் பாய்ச்ச வேண்டும். அல்லது, இப்பகுதியில் தண்ணீர் தேங்குமாறு சொட்டு நீர்ப்பாசணம் அமைக்க வேண்டும்.

**வேரில் டானிக் கட்டுதல்:**




பயன்கள்:

மரத்துக்கு தேவையான நுண்ணூட்டச் சத்து குறைபாட்டை நீக்கி மரத்தை செழுமைப் படுத்தவும், நிறைய குரும்பைகளை உருவாக்கவும், உருவாக்கப்பட்ட குரும்பைகளை உதிரவிடாமல் இளநீராக, காயாக மாற்றவும் மீன் அமினோஅமிலம் கரைசல் வேரில் கட்டுகிறோம்.

செய்முறை:

மரம் 1 – க்கு 20 மி.லி. மீன் அமினோஅமிலம் எடுத்து இத்துடன் 80 மி.லி. இத்துடன் நல்ல நீர் அல்லது மழை நீர் கலந்து கொள்ளவும். 20 + 80 = 100 மில்லி டானிக் கரைசல் ரெடி.



மரத்தில் இருந்து சுமார் 1½ அடி தூரத்தில் உள்ள பென்சில் பருமனுள்ள ஒரு நல்ல வேரை களைவெட்டியால் தோண்டி எடுக்கவும். (கருப்பு வேர் கெட்டுப் போனது. வெள்ளை வேர் ரொம்ப புதுசு. இளம் சிவப்பு வேர் ஆரோக்கியமானது). இந்த வேரின் நுனிப்பகுதியை கத்தியால் பிளவு படாமல் சாய்வாக சீவிக் கொள்ளவும்.

4 இன்ஞ் x 6 இன்ஞ் அளவுள்ள பாலிதீன் பைகளில் இந்த டானிக் கரைசலை ஊற்றி, அதற்குள் சீவிய தென்னை வேர் இருக்குமாறு வைத்து, நூலால் இறுக்கமாக கட்டிவிடவும். தேவைப்பட்டால் பையின் அடிப்பகுதியில் கொஞ்சம் மண்ணையும் சேர்த்து கரைசலை வேர் எடுத்துக் கொள்ள வழி செய்யவும்.

மரமானது 12 மணி நேரத்திற்குள் டானிக் கரைசலை உறிஞ்சிக் கொள்ளும். இது 12 மணி நேரத்திற்குள் மரத்தின் எல்லாப் பகுதிக்கும் போய்ச் சேர்ந்து விடும். 24 மணி நேரத்திற்குள் இதன் மூலம் மரத்துக்கு தேவையான சத்துக்கள் / உணவுகள் தயாரிக்கப்படும். இலை கரும்பச்சையாகவும் காய்கள் பெருக்கவும் ஆரம்பிக்கும். 10 நாட்களுக்கு பிறகு வரும் பாளையில் குரும்பை நிற்கும். 1 மாதம் கழித்து வரும் இளநீர் ருசிக்கும். 7– 8 மாதம் கழித்து வெட்டும் காய்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும்.

திருமதி தங்கமணி இதனை காளாப்பூர் கிராமத்தில் தனது 2 ஏக்கர் நிலத்தில் பயன்படுத்தி நல்ல முன்னேற்றத்தை பார்த்து வருகிறார்.

தங்கமணி,
காளாப்பூர், சிவகங்கை மாவட்டம்
செல் : 9095109562

**மண்புழு உரமிடுதல்:**

பயன்கள்:

தென்னை மரத்துக்கு தேவையான அத்தனை சத்துக்களையும் மொத்தமாக வழங்கி, மரத்தை செழிப்பாக்கி, பாளையை பெரிதாக்கி, பாளை நிறைய குரும்பைகளை உருவாக்கும்.

செய்முறை:

ஒவ்வொரு மரத்துக்கும், ஒரு ஆண்டுக்கு ஒரு மூடை (50 கிலோ) மண்புழு உரம் தேவை. இதனை 20 + 15 + 15 கிலோ என்று 3 தடவைகளில் பிரித்து இடலாம்.

மரத்தைச் சுற்றி $3\frac{1}{2}$ அடி தள்ளி, எடுத்துள்ள வட்டமான கிண்ணத்துக்குள் இட்டு நீர் பாய்ச்சவேண்டும். அல்லது நீர் பாய்ச்சிய பின்பு அதற்குள் மண்புழு உரத்தைப் போட்டு காலால் அலசிவிட்டால் போதும். அடுத்த 10 நிமிடத்துக்குள் அவை அனைத்தும் கரைந்து மண்ணுக்குள் போய்விடும். ஆகவே மண் போட்டு மூடவேண்டியதில்லை. மண்ணுக்குள் போன மண்புழு உரமானது, மண்ணை உயிருள்ளதாக்கி மரத்துக்கு தேவையான 16 வகை சத்துக்களையும் வழங்கிடும்.

மண்புழு உரத்தில் மட்டுமே தென்னைக்கு தேவையான 16 வகை சத்துக்களும் உள்ளன. இவை அனைத்தும் அரிசி, பருப்பு, காய்கறி போல் இல்லாமல், சமைத்து வைக்கப்பட்ட அறுசுவை உணவாக, அதாவது உடனடியாக தென்னை சாப்பிடும் வடிவத்தில் உள்ளன. இதனால் பசியோடு இருக்கும் தென்னை உடனடியாக சத்துக்களை எடுத்துக் கொண்டு செழிப்பாக வளர்கிறது. தொடர்ந்து 3, 4 மாதங்களுக்கு ஒருமுறை மண்புழு உரமிடுவதால், 2 மாதத்தில் பாளை பெரிதாகும். 3 மாதத்தில் மரம் நிறைய குறும்பைகள். 4 மாதத்தில் பெரிய இளநீர். இளநீர் ருசிக்கும், இனிக்கும். 10 மாதத்தில் பெரிய காய்கள். 22 மாதத்தில் இரட்டிப்பு மகசூல்.

**மண்புழு உரத்தின் மேல் பஞ்சகாவியா ஊற்றுதல்**

பயன்கள்:

நமது தோப்புக்குள் உள்ள நாட்டு ரக மண்புழுக்களை மரத்தை சுற்றிலும் வரவழைத்து, மரத்துக்கு வலுவூட்டி மகசூலை கூட்டும். மரத்தைச் சுற்றிலும் மண்புழுக்கள் நிறைய இருந்தால் (1) அவை மரத்தை சுற்றியுள்ள மண்ணை துளையிட்டு, காற்றோட்டத்தையும், வேரோட்டத்தையும் அதிகப்படுத்துகின்றன. (2) ஆழமான மண்ணில் உள்ள சத்துக்களையும், வேருக்கு அருகில் மண்புழு உரமாக மாற்றி வழங்குகின்றது. (3) நாம் வழங்கும் ஆட்டெரு, மாட்டெரு, கோழியெரு, மக்கிய கம்போஸ்ட் போன்ற இயற்கை உரங்களை மண்புழு உரமாக மாற்றி தென்னையை விரும்பி சாப்பிட வைக்கிறது. இதனால் மரமானது இயற்கையிலேயே செழித்து வளர்ந்து சீரான மகசூலைத் தருகிறது.

செய்முறை:

மண்புழுக்கள் மண்ணில் வாழ்ந்தாலும், மண்ணைச் சாப்பிடுவதில்லை. மண்ணில் உள்ள மக்கிய, கரியச்சேர்க்கை பொருட்களை / இயற்கை எருக்களை மட்டுமே சாப்பிடுகின்றன. ஆனாலும் மண்புழுவுக்கு உண்மையான சாப்பாடு என்பதே இதற்குள் கண்ணுக்கு தெரியாமல் உள்ள நுண்ணுயிர்கள் தான். ஆகவே நாம் மரத்தைச் சுற்றிலும் இட்டுள்ள மண்புழு உரத்துக்குள் அல்லது மக்கிய எருவுக்குள் பஞ்சகாவ்யா கரைசலை ஊற்றி வைத்தால், அவைகளை சாப்பிட நமது தோப்புக்குள் உள்ள மண்புழுக்கள் அனைத்தும் தேடி வரும். அவை மரத்தைச் சுற்றிலும் குடியிருந்து கொண்டு, நமது மரத்தை வளர்க்கும். மரத்தின் மகசூலை கொஞ்சம், கொஞ்சமாக உயர்த்தும். ஆம். நிலையான, நீடித்த மகசூலுக்கு நாம் மரத்தைச் சுற்றிலும் மண்புழுவை வளர்க்க வேண்டும். மண்புழுவை அழைத்து வர நாம் பஞ்சகாவியா அல்லது அமிர்த கரைசல் அல்லது ஜீவாமிர்தம் போன்ற நுண்ணுயிர்க் கரைசல்களை மரத்தைச் சுற்றி ஊற்ற வேண்டும். ஊற்றிய நுண்ணுயிர்க் கரைசல் வெயிலில் காய்ந்து விடாமல் மூடாக்கும் போடவேண்டும்.

குஜராத்தில் மரத்தைச் சுற்றி மண்புழு உரமிட்டு, நுண்ணுயிர் ஊற்றிய தோப்புக்களில் 2 மடங்கல்ல, 3 மடங்கு காய்ப்பு அதிகமாக காய்க்கிறது.

**மரத்தைச் சுற்றிலும் ஓலை மூடாக்கு:**

பயன்கள்:

மரத்தை சுற்றிலும் தென்னை ஓலையால் மூடாக்கு போடுவதால், மண்ணுக்குள் ஈரம் பாதுகாக்கப்படுகிறது. தோப்புக்குள் வெயில் அடித்தாலும், மரத்தைச் சுற்றியுள்ள வேருக்கு ஈரப்பதம் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மரத்தில் பசுமையும், பாளையும், குரும்பையும் நிற்கின்றன.

செய்முறை:

ஒரு தென்னை மரமானது ஆண்டுக்கு 12–17 ஓலை மட்டைகளை உருவாக்குகிறது. இந்த மட்டையானது சுமார் 14 – 19 அடி நீளமானது. இதன் அடியில் உள்ள

மட்டைப் பகுதியானது சுமார் 4 அடி நீளமுடையது. மீதியுள்ள 10–14 அடி பகுதியானது ஓலைகளால் ஆனது.

ஓலைகளை தோப்புக்குள் தீயிடாமல், மரத்தைச் சுற்றிலும் மூடாக்காக போடலாம். தென்னை ஓலையின் நுனி மட்டைகளை சுமார் 3–4 அடியில் துண்டுகளாக்கி கொள்ளவும். மரத்தைச் சுற்றிலும் 6 அடி தூரம் வரை அவைகள் குப்புறப் போடவும். குப்புறப் போட்டால் மழைத் தண்ணீர் முழுவதும் மண்ணுக்குள் இறங்கும், மரத்துக்கு போய் சேரும். மூடாக்கு போட்டால் மழைத்தண்ணீர் ஓலையில் தங்கி இற்றுப் போகும். மரத்துக்கு தண்ணீத் கிடைக்காது.

கனமான அடிமட்டைப் பகுதியில் உள்ள ஓலைகளை மட்டும் சீவிப் போடவும். கனமான அடிமட்டை ஓலைகளை மண்ணுடன் ஒட்டவிடாது. மூடாக்கு என்பது உடம்பில் பணியன் அணிவதைப் போல மண்ணுடன் ஒட்டிப் பிடிக்க வேண்டும். இதனால் 1 அங்குலம் மழை பெய்தாலும், மரத்தைச் சுற்றி நாம் போட்டுள்ள மூடாக்கின்படி மண்ணுக்குள் ஈரம்

போய்ச்சேரும். 2 அங்குலம் மழை பெய்தால் (உழவு மழை) மரத்தைச் சுற்றி நாம் அமைத்துள்ள

வட்டப்பாத்தியின் கிண்ணத்துக்குள் நிறைய நீர் சேர்ந்து விடும். அது தென்னை மரத்தின் 10 நாள் தேவையை பூர்த்தி செய்து விடும்.

எவ்வளவு வெப்பமான காலத்திலும் மூடாக்குக்கு கீழ் இருக்கும் மண்ணில் 35–40 சதவீதம் ஈரப்பதம் நிச்சயம் இருக்கும். (அதாவது மண்ணை இறுக்கி பிடித்தால் கொழுக்கட்டை மாதிரி பிடிபடும்). இந்த ஈரப்பதமானது மரத்தில் உள்ள குரும்பைகளை உதிர விடாமல் காப்பாற்றும்.

மரத்துக்கு சொட்டுநீர் பாசனத்தில் தண்ணீர் பாய்ச்சி

மரத்தைச் சுற்றிலும் 1 ஜான் உயரத்திற்கு ஓலை மூடாக்கு போட்டு ஊடுழவு செய்யாவிட்டாலும் மரத்துக்கு ஆண்டுக்கு 200 காய்கள் எடுக்கலாம்.

கரு.சேவுகப்பெருமாள்,தலைவர்,
சிவகங்கை தென்னை உற்பத்தியாளர் கம்பெனி,
சிங்கம்புணரி.
சிவகங்கை மாவட்டம்
செல் : 98421 27522.

## வாசகர் வட்டம்

### பசுமடம் வைத்து இயற்கை கோசாலா பொருட்களை தயார் செய்தல்




நான் கடந்த 5 வருடங்களாக 5 காங்கேயம் நாட்டு மாடுகளை வைத்து ஒரு பசு மடம் வைத்துள்ளேன். பசு மாட்டிலிருந்து கிடைக்கும் பொருட்களை வைத்து பஞ்சகவ்யா, பசுமாட்டு அர்க் (மாட்டு கோமியத்தை காய்ச்சி வடிகட்டியது), இயற்கை ஊதுபத்தி, இயற்கை பினாயில், பால்பொடி, சுத்தமான நெய் மூலம் தயார் செய்யப்பட்ட தலைவலி தைலம், விபூதி, பால்சோப்பு போன்றவற்றை தயார் செய்து விற்பனை செய்து வருகிறேன். கூலியாட்கள் இல்லாமல் எங்கள் குடும்ப உறுப்பினர்களே பசு மடத்தில் வேலை செய்து வருவதால் எங்களுக்கு அதிக செலவு இல்லாமல் சாத்தியமாகிறது.

முத்தையா, கன்னிவாடி,
திண்டுக்கல் மாவட்டம்.
செல் : 9965998006

### திலகவதியின் கால்நடை மூலிகை வைத்யம்



என்னிடம் மூன்று பால்மாடுகள் உள்ளன. நானும் என் குடும்பமும் பசுக்களால் வரும் பாலும் வருமானத்தையும் சார்ந்தே வாழ்கிறோம். “களஞ்சியம்” என்ற அமைப்பின் சுயஉதவி குழுவில் உறுப்பினராக

இருக்கிறேன். ஒருநாள், என் பசுவில் வயிற்றுப்போக்கு மற்றும் உடலில் வீக்கம் ஏற்பட்டது. அந்த நேரத்தில் என்னால் வைத்தியரை அழைத்துவர முடியவில்லை. அப்போது தானம் அறக்கட்டளையில் பணிபுரியும் திருமதி. சுபாங்கி மூலம் கால்நடை மூலிகை வைத்திய குறிப்புகளை தெரிந்து கொண்டு வைத்யம் செய்தேன். வயிற்றுப்போக்கிற்கு கொய்யா கொழுந்து, மாதுளம் பிஞ்சு, வேப்பெங்கொழுந்து, ஆவாரம் மொக்கு ஒவ்வொன்றும் சுமார் 50 கிராம் எடுத்து அரைத்து சேர்த்து கொடுத்தேன். இதனை 2 வேளை கடைபிடித்தேன். குணமாகிவிட்டது. மாட்டின் மேல் காணப்பட்ட கட்டிக்கு இஞ்சியும் சுண்ணாம்பு சேர்த்து அரைத்து போட்டு வருகிறேன். இதில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது. இந்த கால்நடை வைத்திய முறைகள் சேவா மூலம் விவசாயிகளுக்கு கால்நடை மூலிகை வைத்ய செயலியினால் அறிமுகப் படுத்தப்படுகிறது.


திரு. திலகவதி, செம்பேடு கிராமம்,
வேலூர் மாவட்டம்,

## பூக்கட்டும் கருவி




ஆந்திர மாநிலத்தில் நீடதோவலு என்ற ஊரில் ஷியாம் பாபு (வயது 34) பூக்கட்டும் கருவியை உருவாக்கியுள்ளார். இவர் இண்டர்மீடியட் வரை படித்துவிட்டு பின்னர் திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் பி.எஸ்ஸி., வரை படித்துள்ளார். பின்னர் இட்லி, பூரி போன்ற உணவுப்பதார்த்தங்கள் தயார் செய்யும் கருவிகளை உருவாக்கும் நிறுவனத்தில் சில





ஆண்டுகள் வேலை செய்தார். அச்சமயம் நடந்த ஒரு விபத்தில் கழுத்துப்பகுதியில் எலும்புமுறிவு ஏற்பட்டு இதனால் வேலையை விட நேர்ந்தது.

ஒரு சமயம் பூக்கட்டுபவர்களின் சிரமத்தைப் புரிந்து புதிதாக ஒரு கருவியை உண்டாக்க எண்ணினார். பூக்கட்டுபவர்கள் அதிக வேலைப்பாடு கொண்டு உழைத்தாலும் சொற்ப வருமானமே கிடைக்கின்றது. உடல்வலியும், முதுகுவலியும் உண்டாகின்றது. பூக்கள் கெடாமலிருக்க இரசாயனப்பூச்சுகளை பயன்படுத்து கின்றனர்.

இதனால் இவர்களுக்கு கை மற்றும் உடலில் வீக்கம் ஏற்பட்டு சிரமப்படுகின்றனர். இதற்காக ஒரு கருவியை ஏற்படுத்த நண்பர்களிடம் ரூபாய் 2 லட்சம் கடன்பெற்று 3 முன்மாதிரிக் கருவிகளை உருவாக்கி ஐதராபத், கோயம்புத்தூர், பெங்களூருக்கு அனுப்பி வைத்தார். இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. இந்தக் கருவியின் முக்கிய அம்சங்கள் ஒரே நேரத்தில் 2 – 4 வகை பூக்களை சேர்த்து தானாகவே மாலையாகக் கொடுக்கும். இந் கருவியை இயக்குவதற்கு 2 – 3 மணி நேரம் பயிற்சி எடுத்தால் போதுமானது. இந்த கருவியை வைத்து ஒரு நாளைக்கு 20 மீட்டர் வரை மாலைகள் தயார் செய்யலாம். இதன் விலை

ரூ. 40,000.

இந்தக்கருவியைப் பற்றி மேலும் விபரம் வேண்டுவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, ஷியாம்பாபு, ஆந்திர மாநிலம்,

செல் – 7075476701

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 10 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் “சேவா” மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , செல்–9344523892

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 9344523892
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in